கதியாரஞ்சக் கவிதைகள்

கலைஞரின்
கவியரங்கக் கவிதைகள்

•

✷

•

தொகுப்பு:
ஆசிரியர் அ. முத்து

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்
அன்பளிப்பு

வெளியீடு:
அண்ணன் பதிப்பகம்,
ஆனம்பாக்கம் & அஞ்சல்
சாலவாக்கம் (வழி)

முதற் பதிப்பு: 1975

விலை ரூ. 3-00

துரை அச்சகம், காஞ்சிபுரம். (போன்: 2631)

என் கவியரங்கத் தினைத் தில
தில வார்த்தைத் தெடுத்து என்
னிஷாதியின்னியே விளக்கிடுவீர
னிர்தூணையும் கேட்கிறேன்;
னிரணம் நன்பர் அம்பலம்.
எனத்தே வரம்தருமென்ன நீண்ட
நேரம் ஆய்வரம் தீர்ப்பு!

தினத் தொடர்பான
(As Special case) தீர்ப்பாளர்
னெயிலேற்கெனவே நான்கு
மதிப்பெண் வினாத்தாளான்.

நன்பு தீர்/
22/6/7

முன்னுரை

டாக்டர் கலைஞர் அவர்கள் கட்சித் தொண்டராய் இருக்கும் காலம் முதலே அவரது பேச்சும் எழுத்தும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. என்னைப் பொறுத்த வரையில் நான் கலந்து கொள்ளாத கழக மாநாடே இல்லையென்று சொன்னால் அது மிகையன்று. அப்படிப்பட்ட சமயங்களிலெல்லாம், கலைஞரின் கருத்தோவியங்களை நினைந்து, நினைந்து அவர் சொல்லாற்றலைக் கண்டு வியந்ததுண்டு. பேரறிஞர் அண்ணை அவர்களின் மறைவிற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் கழகத் தலைவராய் தமிழக முதல்வராய்த் திகழ்ந்து தமிழுக்கும், தமிழ்க் கலைக்கும்— தமிழினத்திற்கும் ஆற்றிவரும் செயலகள் கணக்கிலடங்கா. இத்துணைப பணிகளுக்கிடையே பல கவியரங்கங்களுக்குத் தலைமையேற்று அவர் பாடியுள்ள பாக்கள் என் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்தன. எல்லாக் கவியரங்கக் கவிதைகளும் இடம் பெறவில்லை. நான் சேகரித்து எழுதி வைத்திருந்த சில மட்டும் இங்கே தரப்பட்டுள்ளன. நான் பெற்ற இன்பம் பல்லோரும் பெற வேண்டும் என்ற என் அவாவின் விளைவே இச்சிறு நூல்.

என் முயற்சிக்கு ஊக்கமளித்து அச்சிட்டுத் தந்ததுடன், கலைஞர் அவர்களது அணிந்துரையை நம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களது மகன் திருமணத்தில் கலந்துகொண்ட கலைஞர் அவர்களிடம் பெற்றுத் தந்து இந்நூலை அணிபெறச் செய்துள்ள துரை அச்சக உரிமையாளரும் என் கெழுதகை நண்பருமான அண்ணன் திரு. வெ. சம்பந்தம் அவர்களுக்கு மிகவும் கடப்பாடுடையேன்.

அண்ணன் பதிப்பகம்,
ஆனம்பாக்கம் & அஞ்சல்,
சாலவாக்கம்-வழி.

அன்பு,
அ. முத்து,
22—6—75.

பதிப்புரை

இதயத்தை இயக்கத்தின்பால் இரண்டறக் கலந்துவிட்டுள்ள என் இனிய நண்பர் ஆசிரியர் அ. முத்து அவர்கள் எழுதிவைத்து சேகரித்திருந்த கலைஞரின் கவியரங்கக் கவிதைகளை இரண்டாண்டு களுக்கு முன்பாகவே அச்சிட்டுவிட்டேன். அணிந்துரையை கழகத் தலைவரிடமே பெற்று வெளியிட வேண்டும் என்ற வேட்கையால் இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. என் கெழுதகை நண்பரும் மதிப்பிற்குரியவருமான திரு. **K. M.** இராசகோபால் அவர்கள் மகனின் திருமணத்திற்கு முதல்வர் அவர்கள் வருகைதந்திருந்தார்கள்.

என் ஆவலை வெளியிட்டேன். அங்கேயே-அப்பொழுதே அணிந்துரை தரப்பட்டுவிட்டது.

பேரறிஞர் அண்ணை அவர்களின் இதயத்தை இரவலாக வாங்கி வைத்துள்ளது உண்மையே என்பதை இதன்மூலம் தமிழக முதல்வர் நிரூபித்து விட்டார்.

தொண்டரை மதிக்கும் தூய தலைவராம் டாக்டர் கலைஞரின் புகழ் தமிழ் உள்ளளவும், தமிழர் உள்ளளவும் நிலைபெற்று நிலவுக! என வாழ்த்தி வணங்குகிறேன்.

அன்புள்ள,

வை. சம்பந்தன்,

உரிமையாளர்,

துரை அச்சகம்.

பெரிய காஞ்சிபுரம்,
17—7—75.

அறிஞர் அண்ணு மறைவுக்கு வாஞ்ஞலியில்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

பாடிய

எம் அண்ணு - இதய மன்ணு!

பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம்—அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்—அவர்

மலர் இதழ்கள் தமிழ் பேசும்—
மா—பலா—வாழையெனும் முக்கனியும் தோற்றுவிடும்
விழிமலர்கள் வேலாகும்—வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்
கால் மலர்கள் வாடிடினும் அவர் கடும்பயணம் நிற்காது
கைமலர்கள் பிணைத்து நிற்கும் தம்பியரை, கழகத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர்போல் தலைநாணச் செய்துவிடும்.
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப் பூ மணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடி வரும் தென்றல்
நாடி வரும் பூமுடியே! புகழ்முடியே! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே—தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனைக் காக்க எனைத் துறப்பேன்—என
ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடி நின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்.....

முருகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல் மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினே!

தங்கு கண் வேல் செய்த புண்களை
அன் பெனும் வேது கொண் டொற்றியுஞ்
செங்கனி வாய் மருந்தூட்டுவார்
சீர் மையைப் பாடக் கேண்மினே!

பொரு தடக்கை வாளெங்கே? மணி மார்பெங்கே?
போர் முகத்தில் எவர் வரினும் புறங் கொடாத
பரு வயிரத் தோளெங்கே? யெங்கே யென்று
தம்பியரைக் கேட்டானைக் கேண்மின்! கேண்மின்!

காஞ்சி யிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற் சென்னி
காஞ்சி யிருக்கக் கலிங்கம் குலைந்த
களப் போர் பாடத் திறமிலை என்று
மயல் கொண்ட மாதர் தமைத் துயில் எழுப்ப
செயங் கொண்டார் பாடினர்,
களப்பரணி.....கலிங்கத்துப் பரணி
அளப்பரிய வீரத்தின் புகழ்ப் பரணி—யான்
கவிப்பரணி யேறி காஞ்சி புரப்பரணி பாடிநின்றேன்—
இன்று

அவலப்பரணி—பாடுகின்றேன்
கவியினில் பொரு ளெனக் கரும்பினில் சுவையென
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமென
குலவிடும் அருவி குழறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென

அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையென
கலை மணங் கமழக் கூடிய கவிஞர்
தலை மகன் அண்ணை திருப்புகழ் பாடிட
நில மகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ !

வெள்ளம் !
வெள்ளம் !
மாபெரும் வெள்ளம் !

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழாம் ஆண்டில்
தாயகத்தில் மொழிப் புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றுல்—ஈரோட்டு
நாயகத் தின் இணை யில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணண் களம் புகுந்தார் காஞ்சி பூண்டு
இருமூன்று திங்கள் வரை சிறையில் வாடி
தரும் ஊன்று கோலாகத் தமிழைத் தந்து
அரு மூன்று எழுத்தாலே அண்ணுவானுர் ... ...
அன் றிருநாள் ஐம்பத்தி ரெண்டு தனில்
சென்னையிலே சொன்னேனே நினைவுண்டா உங்களுக்கு ?
மூன்றெழுத்திலே ஒரு சிறப்புண்டு முத்தமிழ் மணமுண்டு
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முரசார்த்தவர் தமிழர்—அவர் வாழ்ந்த
தமிழ் 'வாழ்வு'க்கு மூன்றெழுத்து—அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் 'அன்பு'க்கு மூன்றெழுத்து ...
அன்புக்குத் துணை நிற்கும் 'அறிவு'க்கு மூன்றெழுத்து ...
அறிவார்ந்தோர் இடையிலெழும் 'காதலு'க்கு மூன்
றெழுத்து ...
காதலர்கள் போற்றி நின்ற கடும் 'வீரமோ' மூன்
றெழுத்து.....

வீரம் விளைக்கின்ற 'களம்' மூன்றெழுத்து.....
களம் சென்று காணுகின்ற 'வெற்றி' மூன்றெழுத்து.....
அந்த வெற்றிக்கு நமையெலாம் ஊக்குவிக்கும்

அமைதி மிகு 'அண்ணு' மூன்றெழுத்து அறிந்திடுவீர்
எனச் சொன்னேன்.

திக்கெட்டும் தமிழ் முழக்கம்
திசை யெங்கும் சொல்மாரி
வக்கற்றோர் வகை யற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி!
எழுகின்றார் அண்ணு
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம் .....புதுமை .....மணக்குதங்கே.....
"ஏடா தம்பி எடுடா பேனு.....
எத்தனை உணர்ச்சி? எத்தனை எழுச்சி!
"கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு"
கருத்துப் பேழை—கற்பூரப் பெட்டகம்! .....
"மரக்கிளையிலே பிணம்—வெந்த புண்ணிலே வேல்"
மறந்திடப்போமோ—மனங்கவர் வாசகம்
"சாலை யோரத்திலே வேலையற்றதுகள்
வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்
வேந்தே! அது தான் காலக்குறி"
அண்ணனுக்கன்றி யாருக்கு வரும் இந்த அழகு நடை?
அறிவு நடை?
"கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது"
தமிழகம் மறவாத் தலையங்க மன்றே?
"இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்
தம்பியுடையான் படைக் கஞ்சான்"
ஒப்பிலா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனைன் மணியம் எனினும்—நம்
மனதில் பதித் தவர் அண்ணுவன்றே!
"மாற்றுன் தோட்டத்து மல்லிகை மணக்கும்"
அரசியல் பண்பினை போதிக்கும் அழகே.....

"மறப்போம்—மன்னிப்போம்"
மாற்றூர் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?
சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றூர் அண்ணை—அதை மறுத்து
நாலைந்துபேர் குதித்திட்டார் என்றூல்
அவர் கண்டு சிரித்திட்டார் அண்ணை—
அனைவரையும் ஓர் அன்னை பெற்றெடுக்க வயிறு தாங்காக்
காரணத்தால்
தனித்தனித்தாய் ஈன்றெடுத்த தம்பிகளே என அழைத்து
கனிச் சுவையாய்க் கற்கண்டாய்த் தேன்பாகாய்
அன்பு காட்டி
பனி மலர் வீழ்த் தும்பியதாய்த் தழுவிக் கொண்டார்.
சொலல் வல்லார் சேதுப் பிள்ளைதனை
சோமசுந்தர பாரதியைச் சொற்போரில்
சொக்க வைத்தார்—பாவம்
சிக்க வைத்தார்!
நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே—பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்தலாகா தெனும் கொள்கை
யாலே—அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்
வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தை யென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டு விட்டார்—
அண்ணுவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர்போலக் கொள்கையற்றூர் வீழ்ந்து
போனர்
தீரர் அண்ணு திராவிடர் கழகமெனும் பெயர் மாற்றத்
தீர்மானம்

வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்
அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றிய போது
துன்ப நாளெனும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினர் போரை !
இன்ப நாளிது ! இனிய நாளிது !
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து
என்றே அண்ணல் அன்றே சொன்னார்.....
அன்று முதல் அண்ணன்—அய்யா உறவினிலே கீறல்விழ
அது நாற்பத் தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய் மாறி
முகில் கிழித்து வெளிக் கிளம்பும் முழு மதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச் செய்தார்
தலைவருடன் கூடிவாழ முடியாமல்
பெரும் பான்மைத் தோழருடன் வெளியே வந்தும்
நிலைகுலையா நம் அண்ணன் அன்று சொன்னார்
அது
நேற்று சொன்னது போல் இருக்கு தம்பி !
தலைவரில்லா முன்னேற்றக் கழகத்துக்கு—என்
தலைவர் இருந்த நாற்காலி, காலியாக இருக்கும்—இதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்.....
அது வரையில் காத்திருப்பேன் என்றார்.
பூத்திருக்கும் மலர்த் தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பது போல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்.
கண்ணீர்த் துளிகளே ! நாட்டின் கண்மணிகளே!
என அழைத்து

செந்நீர் சிந்துதற்கு அணி வகுத்தார்
பாரேனும் பகர்ந்த துண்டா?
யாரேனும் கேட்டதுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர் இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப் பாராள வந்த கதை?
ஈராண்டு முடியவில்லை எம் அண்ணை ஆட்சியேற்று
சீரார்ந்த செயல் பலவும் செய்தலுற்றார்
ஏரார்ந்த உழவர்க் கெல்லாம் ஏற்றம் தந்து
எழில் வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி
உலகத் தமிழ் மாநாடு துவக்க வந்த
ஓங்கு புகழ்க் குடியரசுத் தலைவரவர்
இணையற்ற காட்சி கண்டேன் மாட்சி கண்டேன்
இதுபோல் வாழ்வில் என்றும் கண்டதில்லையென
ஊர் மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி
ஆந்திரத்துப் பிரமானந்த ரெட்டி காரும்
ஆகா—நீதானே அசல் காந்திய வாதியென்று
ஆராதனை செய்திட்டார்— ஆண்டொன்று கழியவில்லை
மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர்—பல
மாநிலத்தில் கை கழுவி கலயம் கட்டி விட்டார்

மரங்களிலே

மகாத்மாவின் தோன்றல் நீர்தான் என்று
கிரியென்றுல் மலையன்றே— அந்த
மலை தவழும் முகிலானர் நம் அண்ணை
வி. வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது
பன்னெட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார்—அன்று
தென்னெட்டுச் சிகரமாக இருந்திட்டார்—அண்ணன்பற்றி
என்ன சொன்னர்?
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார்—அண்ணை
பழத் தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார்—அந்த
மறை மலை தந்த புகழ் மொழி ஆயிரம்

பசுமலை பாரதி—பாண்டியன் தோற்றம்—அவரை
நாவலர் என்று நாடே அழைக்கும்—அவர்
சழக்கரால் வீழ்ந்த தமிழ் நிலம் காக்க—மன
அழுக்கில்லாத் தலைவன் கிடைத்தான் என்றே
அண்ணன் பெருமை சொன்னர்—அண்ணை
ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்று போல்
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறுயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றுள்.
கலை மகளாம் நம் அன்னை வள்ளுவனைத்
தலை மகனைப் பெற்றெடுத்தாள்
மன்னன் என்றுல் கரிகாலன்
நூல் என்றுல் திருக்குறளே
எனப் போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்—மாந்தரெல்லாம் களித்திட்டார்
வின் முட்டும் மலையோரம்—நம்
கண்பட்டும் படாமலும் எழுகின்ற நச்சுமரம் போல
பண்பட்ட தமிழர் வாழ்வில்—முதுகில்
புண்பட்ட கொள்கை யெல்லாம் மூண்ட தந்தோ!
சாதிகளைக் காணது குறள் ஒலித்த தமிழ் மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவு மணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள் கண்டு
விட்டார்
மொழியுணர்வே இல்லாத வாயுணர்வின் மக்காள்-தமிழ்
அழியினும் வாழினும் என்னென்று இருந்திட்டார்
அறநெறியே குறிக்கோளாய்த் திகழ்ந்திட்ட பெரு
நிலத்தில்
பிற நெறிகள் பயிர் செய்தார்—பிழை குவித்தார்

மழை யற்றுப் போன வயல் போல—மாறிற்று தமிழர் மனம்
அழுக்காறு—அவா—வெகுளி—இன்னுச் சொல் நான்கு மின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யென்று
பொருள் குவித்து வளம் செழித்த நாட்டில்—இன்று
இருள் கவிந்து வாட்டம் கொடி போட்ட தங்கே
வாடினுள் தமிழன்னை—சோகப் பாட்டுப்
பாடினுள் தமிழன்னை—சுடு நெருப்பில்
ஆடினுள் தமிழன்னை—ஓடினுள் ஓடினுள்
ஒரு வழியும் கிடைக்கவில்லை
புவியூர் விட்டுப் புகழூரில் வாழுகின்றுன்
கவியூரின் பெரு வேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்
என்றுள்.

என்னம்மா என்றுன் குறளோன்
தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம்வரும் தமிழகத்தில்
மீண்டும் நீ பிறந்திட வேண்டுமென்றுள்
தங்கம் எடுக்கவா?—என்றுன்
தமிழர் மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க என்றுள்
இன்றென்ன ஆயிற்றென்றுன்
குன்றனைய மொழிக்கு ஆபத் தென்றுள்
சென்றடையக் குடில் இல்லை ஏழைக் கென்றுள்
கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல் ஓங்கிற் றென்றுள்
கற்றனையோர் வீணில்—அறிவில்
கதைக் கின்ற கதையும் சொன்னுள்
அழுத கண்ணை துடைத்தவாறு

அழுத மொழி வள்ளுவனும்
அம்மா நான் எங்கே பிறப்ப தென்றுன்
தொழுத மகன் உச்சி மோந்து—ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக்கொண்டு
உழுதவயல் நாற்றின்றிக் காயாது இனிமேலே எனப்
புகழும்
உழுவன்போல் உள்ளமெலாம் பூரித்துத் துள்ளி எழ
காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே! தேன் பாகே! திருக்குறளே
நீ காஞ்சியிலே பிறந்திடுக என்றுள்
பிறந்திட்டான் நம் அண்ணனுக
அறிவு மன்னனுக—
பொதிகை மலைத் தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந் தமிழர் புறப் பாட்டாய்
வந்துதித்தான் அண்ணன்—கீழ்
வானுதித்த கதிர் போல—
புரியாதோர்க்கு ஒரு புதிர் போல
அவன் புகழைப் பாடுதற்கு
அவன் வளர்த்த நானும்
அவன் தந்த தமிழ் எடுத்து
இவண் வந்தேன் இதுதான் உண்மை
தலைவரென்பார் தத்துவ மேதை என்பார்
நடிகர் என்பார் நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றூர்—
என்பார்
மனிதரென்பார் மாணிக்கமென்பார்
மாநிலத்து அமைச்சரென்பார்
அன்னை யென்பார் அருமொழி காவல் என்பார்
அரசியல் வாதி என்பார்—அத்தனையும்

தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் நெஞ்சத்து
அன்பாலே
"அண்ணை" என்ற ஒரு சொல்லால்
அழைக்கட்டும் என்றே--அவர் அன்னை
பெயரும் தந்தார்.
அந்த அன்னை குலம் போற்றுதற்கு
ஒளவைக் கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக் கோர்சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும்
வணங்காமுடி பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குறள் பரப்ப திருவள்ளுவர்க்கும் சிலை
பத்து சிலை வைத்ததிலை—அண்ணன் தமிழின்பால்
வைத்துள்ள
பற்றுதலை உலகறிய
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்தபோது.....
ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றீர்.....
ஆணையிடுகிறீர் எம் அண்ணை என்றிருந்தோம்—
அய்யகோ இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்
ஓர் விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!

எம் அண்ணை.....இதய மன்னை.....
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே
எமை விடுத்துப் பெரும் பயணத்தை ஏன் தொடர்ந்தாய்
உன் கண்ணெனையின் கத கதப்பில் வளர்ந்தோமே
என் கண்ணெல்லாம் குளமாக ஏன் மாற்றிவிட்டாய்?—

நிழல் நீதான் என்றிருந்தோம்—நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய் விட்டாய் நியாயந்
தானே?

கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல
நான் தானடா நன்முத்து எனச் சொல்லி
கடற் கரையில் உறங்குதியோ? .....
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே—அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய்?
கண் மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்.....
இன்று.....
மண்மூடிக் கொண்டுன்னை பார்க்காமல் தடுப்ப தென்ன
கொடுமை!

கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்—
இதையும் தாங்க ஏதன்னை எமக்கிதயம்
கடற் கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணை
எழுந்து வா எம் அண்ணை!.....

வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதியெமக்குத் தெரியும் அண்ணை—நீ
இருக்கு மிடந் தேடி யான் வரும் வரையில்.....
இரவலாக உன் இதயத்தை தந்திடண்ணை.....
நான் வரும்போது கையோடு கொணர்ந்து அம்மை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணை.....

நேரு பிறந்தநாள் கவியரங்கில்

மாண்புமிகு முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள்

தலைமையேற்றுப்

பாடிய கவிதை 14—11—70

பங்கேற்ற கவிஞர்கள்: எஸ். டி. சுந்தரம்

கவிஞர் கொத்தமங்கலம்சுப்பு—கவிஞர் முருகுசுந்தரம்

கவிஞர் அப்துர்ரகுமான்—கவிஞர் கண்ணதாசன்

ஆகிய ஐவர்

இடம்:—பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம்.

கவிஞர் எஸ். டி. சுந்தரம் — பெண்ணுரிமை

கவிஞர் கொத்தமங்கலம்சுப்பு — பேச்சுரிமை

கவிஞர் முருகுசுந்தரம் — எழுத்துரிமை

கவிஞர் அப்துர்ரகுமான் — வாக்குரிமை

கவிஞர் கண்ணதாசன் — சொத்துரிமை.

தங்கக் குணம் படைத்த நாவலரே

தகைமைசால் அமைச்சர்களே.....

சங்கத் தமிழ் எடுத்து கவி பாட வந்திட்ட புலவர்களே...

சான்றோரே.....

வணக்கம் ஏற்றிடுக.....

வங்கக் கடலருகே உறங்குகின்ற நம் அண்ணன்

அடி தொழுது தொடங்குகின்றேன் தலைமையுரை—

புன்னை மரம் நிழல் விரிக்க—தமிழ்

அன்னை மடி சுகம் அளிக்க

சென்னை நகர் ஒளி தெளிக்க

முன்னே இருள் விலக்குதற்கு
முயலுகின்ற தமிழ் அரசு .....
முது பெரியோன் காந்தியாரின்
மூத்த பிள்ளை நேருவுக்கு.....
முத்தமிழால் கவி தொடுக்கும்
புவியரங்கில் புகழ் குவித்த பண்டிதர்க்குக்
கவியரங்கில் மாலை சூட்டும்.....
பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட என்றனுக்கு
காத்திருந்த காட்சி யொன்றைக் கவியாக்கித்
தருகின்றேன்
சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில் செண்பகம்தான்
ஏதோ சேதி தனைச் சொல்ல:
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி.....
அவள் செவியில் வாய் வைத்தார்.....
பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு
அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடை போடத் தொடங்கிவிட்டார்.....
யாரைத்தான் தேடுகின்றார் பூப் பெண்கள்?
கட்டுதற்கு
நாரைத் தான் தேடியலை கின்றாரோ என எண்ணி
நான் வியந்தேன்.....
தென்றலிலே மணம் பரப்பித் தேடுகின்றார்
தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று .....
முழங்காலை வலிக்குதடி என்றாள் முல்லை.....
சிவந்ததடி என் பாதம் எனச் செண்பகம்
இளித்தாள் பல்லை.....
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந்தொல்லை—
பூங்காவின் மூலை யொன்றில் புலம்பல் ஒலி கேட்டவுடன்

பூப் பெண்கள் "அதோ, அதோ" எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார்.....
"பூமானே! புகழ்க்குன்றே! போனையோ என் தலைவா!
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனை யெடுத்து முத்த மீந்து இதயத்தில் ஏற்றிக்
கொண்டாய்—இன்று
எனை விடுத்து நீ மட்டும் நெடுந் தொலைவு போய்
விட்டாய்—என்ன நியாயம்?.....
இதழுக்குத் தேன் தருவாய்—பதிலுக்கு
நான் தருவேன்.....மறந்தா விட்டாய்?
மார்பகத்தில் அணைத்திருப்பாய்.....
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்.....
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம் தான் கல்லோ?
எனக் கதறும் ஒலி கேட்டு .....
இனிய நறும் பூப் பெண்கள் அருகே சென்றூர்.....
மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கி விழும் நிலைமையிலே ரோஜா நின்றூள்.....
மல்லிகை முல்லை அருகே சென்று
என்னடி ரோஜா இன்னமும் அழுகை
நல்லவர் இருந்தார் நானிலம் வாழ.....
வல்லவர் இருந்தார் வாரி அணைக்க.....
போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணீ! புன்னகை காட்டு!
ஆறுதல் கூறினர்; அழகு ரோஜா,
தேறுதல் பெறுமல் தேம்பி அழுதாள்
இரவு உமிழும் எச்சில் என்பேன் பனித்துளியை—என்
இறைவனது இதழ் முத்தம் அமுதம் என்பேன்.....
அன்றமுதம் தந்தெனக்கு ஆசை காட்டி.....
இன்றென்னை எச்சில் பனித்துளியில்

நனைத்து விட்டார் என் செய்வேன்?
முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார்
என நினைக்கும் போதெல்லாம்
முள்ளாகக் குத்துதடி மேனி யெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்தச்சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறுமணந்தான் எதற்கு?
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார்—அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன்.....
உறங்குகின்றூர் விழித்தெழுவார்.....படி
இறங்கி வந்து பாவையெனை அழைப்பதற்குள் .....
அவர் நெஞ்ச
அரங்குதனில் ஆடுதற்கு சிவப்பாடை புனைந்து
நின்றேன்
அதற்குள் காலக்
குரங்கின்கை "மாலை" யாக ஆகிவிட்டார்
என் வாழ்க்கை
இரவாக ஆக்கி விட்டு!
போய் விடுங்கள் எனை விடுத்துத் தனியாக.....
புனிதனவன் பிறந்த நாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே
என் கடமை.....
ரோஜாவின் சொற்கேட்டு சோர்ந்து போனேன்.....தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற அவளை யெண்ணி
பேசாமல் திரும்பி விட்டேன்; இன்றென்
மனைவி கூந்தல், மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்துவிட்டேன்—இன்று
மலர் பறித்தால்; அது மாவீரன் நேருவுக்கு
மாலை தொடுத்திடவே!...நம்
மடி பறித்து சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை
வீரன்

அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு . ...
அடக்குமுறை தாங்கிக் கொள்ள.....
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலே
இருட்டுச் சிறையில்
கழித்தத் தியாகி!
எண்ணெயிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம்—எனினும்
எண்ணெயிட்டார் விடுதலே வேள்விக் கென் போம்!
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும் ஏழையை
அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்—
இடி இடிக்கும் பேச்சில்—இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில்—தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில்—அதிர்
வெடி முழக்கும் செயலில்—விடாப்
பிடி யிருக்கும் குணத்தில்—விடுதலைக்
கொடியிருக்கும் கையில்—கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்
[இங்கென்ன வாழ்கிறதோ எனக் கேட்காதீர் எனைப்
பார்த்து]
நீதிக்கு எதிரானவற்றை யெல்லாம்
நேர்நின்று எதிர்த்ததாலே நேருவானர்.....இந்திய
நீள் எல்லைக்கோடு தன்னைப் பெரும் பகைவர் கடந்த
போது—
என்ன நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து எதுவும்
நேராது நான் இருக்கு மட்டும் எனச் சொல்லி நேரு
வானர்.....

துணி விருந்தால் உள்ள தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா ? எனக் கேட்டார் குழந்தையிடம்—
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும்—
இதனுல் 'நேரு மாமா" வானுர் ....
மதம் கடவுள் நம்பிக்கை இவைதனிலே
அவர் கொள்கை தனி எனினும்—பிறர்
மனது புண்படாமல் நல் வழியில் ஆட்சி செய்தார்—தன்
மரணத்தின் பின்னுலே மதச் சடங்கு வேண்டாமென—
தக்க
தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது குன்ருனர் நவின்ற—
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கைத் தொகுத்தே சொன்னர்
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய் கர்த்தபம்
ஆகும்.....
ஏலத்தில் சிலபேர் கோபுர உச்சியில் குந்திக் கொள்வர்
இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது இவ்விதமல்ல—
அவர்
சேலத்து மாம்பழம்—சென்னைக் கடற்கரை
கொற்கை முத்து கொள்ளேகால் பட்டு
தஞ்சைக் கோயில்.....தண்புனல் காவிரி
தறியில் காஞ்சி—தடந்தோள் பாண்டியன்.....
கருத்தில் மாறுதல் இருந்த போதிலும்—எதிர்த்தும்
களங்கள் கண்ட போதிலும்—
காலமானர் நேரு என்றதும்—கண்ணீர் உகுத்தார்
கலங்கி அழுதார்
காராக் கிரகம் கிடந்த அண்ணு .....
கண்ணிய அரசியலே போற்றிடும் நாட்டில்
கண் நிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!

படை துள்ளி வரும்—பகை
அள்ளி வரும்—எரி
கொள்ளி வரும்—கரும்
புள்ளி வரும்—சினக்
கள்ளி வரும்—எனச் சிலர்
எள்ளி வரும் போது—விடி
வெள்ளி வரும் என—பகைக்
கிள்ளி எறிந்தான்—இன்று திருப்
பள்ளி அயர்ந்தான்—நேரு—
திருப்பள்ளி அயர்ந்தான்!

"வாய் மடித்துக் கிடந்த தலை மகனை நோக்கி
மணி யதரத் தேதேனும் வடுவுண்டாயோ" எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளை
பேய் ஆட்டம் போடுகின்ற போர்முகத்தை
நாய் நரிகள் தீனி தின்னும் கொடுமைக்கூத்தை
காய், பழம், பூ, பிஞ்சு, சாய்ந்து விழும் சமர்களத்தை—
நம்

கலிங்கத்து பரணி சொல்லும் .....அந்தக்
கலிங்கத்தின் அமைதிபூண்ட அசோக மன்னன்
கண்டெடுத்த அறவழியில் உலகுகாக்க—நேருபிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி
வெண்புறுவைப் பறக்கவிட்டார்
விண்ணின் மேலே!.....

"தலையாகிய அறமே புரி
சரிநீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்"—இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேனிய பாவலன்—நம்
நிலை மாறிடப் பாடிய காவியம்.....

ஜனநாயகம் ஜனநாயகமென
ஜவகரும் முழங்கிட — சிலர் தம்
தனி நாயகம் சிறந்திட செயல் பட்டதை
மறந்திடோம்—
பண நாயகம் கண நாழியில் நகர்ந்திட
குண நாயகர் நேருவும் உடன் முனைந்திட
காலந் தான் போதவில்லை
காலமுமே பொறுக்கவில்லை !
என் கவிதை இனி மேலும் நீண்டுவிட்டால்
காலம் பொறுக்காது
கவிஞர்களும் பொறுக்க மாட்டார்.....
அதனாலே முடிக்கின்றேன்
முதற் கவியை அழைத்துவிட்டு! .....

முதலில் **கவிஞர் எஸ். டி. சுந்தரம்**

பெண்ணுரிமை பற்றிப் பாடுதற்கு
பெரிதும் விருப்பமுற்ற ஆண் கவிஞர் ...
மண்ணுரிமை காக்கும் போர்ப்படைக்கு.....
தெள்ளு தமிழ் எடுத்துத் திறன் கவிதைப்
பள்ளு பல தந்திட்ட மறக் கவிஞர் .....
படையல் உரிமை மட்டும்
பெற்றுள்ள பெண்ணுக்கு.....
படையில் உரிமை வேண்டுமென்க .....
உடையில் மட்டும் புது உரிமை
ஒப்போம் என்று கூறிடுக.....
சுந்தரக் கவிவாணரே..... என்
சுந்தரக் கவிவாணரே.....
சுவையான பாட்டப்பம் தந்திடுக
அவையோரும் வீட்டப்பம்போல் உண்டிடுக...

X X X X

அடுத்து.....

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு

பேச்சுரிமை கேட்கின்றார்.....
பாட்டுக்கிடையே அவர் எப்போதும்
பேசுவது பழக்கம் தானே.....அதனாலே
கவியரங்கில் தனக்கு மட்டும்
பேச்சுரிமை கேட்கின்றார்
ஏச்சுரிமை கேட்கின்றார்

சிலபோர் இன்று.....
அதனாலே
தமிழ்ப் பண்பாட்டின்
மூச்சுரிமை போகுமென்று
அஞ்சுகின்றேன்
நேரம்
ஆச்சு; உரிமை தருகின்றாயா இல்லையா என
அன்பர் சுப்பு கேட்கும்வரை—தாராதிருந்தால்
அது எந்தன் தப்பு! .....
கொத்தமல்லிக் கொப்பு

குழம்பினிலே மணக்கும்
கொத்தமங்கலம் சுப்பு—இப்போது
குழம்பாமலே மணக்கும்.

X X X X

அடுத்து

கவிஞர் முருகு சுந்தரம்

எழுத்துரிமை என்னிடத்தில் கோருகின்றார்.....
என் நிலையை அவர் அறியார்.....
பரப்பிரம்மம், தூக்குமேடை, கலை

ஒளி வழங்கும் உதய சூரியனும்
இப்படிப்
பல எழுத்தைப் பறி கொடுத்து ...
அதன்
தலை எழுத்தால் தடை செய்யப்பட்ட கதை
இவர் அறியார்.....
ஆயினும்
உரிமை தரும் இடத்திலே நான்
இருக்கின்ற காரணத்தால்.....
முருகு சுந்தரத்தைக் கவி எழுத
முடுக்குகின்றேன்.....
வந்திடுக தமிழ்த்தேன் சிந்திடுக .....

X X X X

அடுத்து

அப்துர் ரகுமான்

வில்லில் விளையாடுபவர் வீரர் எனில் இவர்
சொல்லில் விளையாடுகின்ற சூரர் ஆவார்
வெற்றி பல கண்டு நான்
விருது பெற வரும்போது
வெகுமானம் என்ன வேண்டும்
எனக் கேட்டால்—அப்துர்
ரகுமானைத் தருக என்பேன்
அவர்
வாக்குரிமை கேட்கின்றார் இப்போது,
பெற்றுக் கொண்டு எனக்கே தான்
அளிக்க வேண்டுமெனச் சொல்லமாட்டேன்.....

சொன்னலோ .. அதன் பெயர்
வாக்குரிமை ஆகாதன்றே !
வந்திடுக நண்பரே !
வழங்கி விட்டேன் வாக்குரிமை ...
நீர் பாடும் .
பாட்டுக்கு வழிச் செலவு
தந்திடுவோம்—
ஓட்டுக்கு மட்டும் ஒரு தொகையும் கேட்காதீர்.....

X X X X

அடுத்து

கவிஞர் கண்ணதாசன்

கவியரசென்று என் தோழர் தன்னை
அழைக்கின்றார்
எனக்குக் கோபம்
யான் அமைச்சு தானே; இவர் அரசன்றே?
அரசனுக இருந்தாலும் இவர் என்
ஒற்றர் என்பேன்
ஐயிரண்டு பத்தாண்டு
அய்யா, இவர் மாறு வேடம் பூண்டு
மாற்றூர் படை வீட்டைச் சுற்றி வந்தார்—இன்று
மறு பிறவி எடுத்து வந்தார்.
இவரைக்
குயில் என்று பறக்கவிட்டேன் பாடிவர
கோட்டான்கள் கூட்டத்தில்
குயில் பாட்டு எடுபடுமா ?
கூப்பிட்டுக் கொண்டேன்
என் தோட்டத்திற்கே !

வந்தவுடன் சொத்துரிமை கேட்கின்றார்—பாவம்
நொந்த மனம்! இவர்
சொத்துரிமை கேட்பதிலும் நியாயம் உண்டு—
பிள்ளைகள்

பத்துப் பனிரெண்டு . ...
போகட்டும் அளித்து விட்டேன்
சொத்துரிமை.....
வருக! வாழ்க!

முடிவுரை

பாட்டரங்கில் பாவலர்கள்
கேட்ட உரிமை வழங்கிவிட்டோம்.....
நாட்டு நிலை தொட்டறிந்து
நல்லுரிமைப் பேணிக் காக்க
உறவுக்குக் கை கொடுப்போம்—நம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்—
என

முழங்கிக் கலைந்திடுவோம்—
முழுமனிதன் நேருதனை வணங்கிடுவோம்.

"வாழ்வெனும் பாதையில்"

"வாழ் வெனும் பாதையில்"—எனுந் தலைப்பில் திருச்சி
வானெலியில் புத்தாண்டு நாளான ஏப்ரல் 14-ஆம் நாள்

மாண்புமிகு

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமையில்

நடந்த

• கவியரங்கின்

தலைமைக் கவிதை

14—4—71

வணக்கம், வந்திருக்கும் அனைவர்க்கும்—கவி
வடித்தளிக்கும் புலவர்க்கும் வணக்கம்—
நித்திரையில் ஆழ்ந்திருந்த நீள் வையம்
நீலவிழி ஒளி காட்டி நடை போட்டு
முத்திரைகள் பலவற்றைப் பதிப்பதற்கு
முழு மூச்சாய் ஆண்டு பல உருண்டுருண்டு
சித்திரைத் திங்களிலே சிரிக்கின்ற
செழுமை கண்டோம்.....பெருமை கண்டோம்
சௌமியாதான் சென்ற ஆண்டு.....நல்
சௌமியனைத் தமிழர்க்குத் தந்த ஆண்டு
சௌமியாவை அண்ணனுமே புனைப் பெயராய்ப்பூண்டு
சுவை சொட்டக் கதை குவித்துப் போனர்—மாண்டு!
"சௌமியா" மறைந்து "சாதாரண" வந்ததுபோல்—
அந்தச்
சௌமியன் மறைந்து இந்தச் சாதாரணன் வந்துள்ளேன்

அரங்கின்றி வட்டாடுகின்றூர் அரசியலில் பலபேர்.....
குரங்கின்றிச் சேட்டைகள் ஏராளம் காண்கின்றேம்
சமூகத்தில்
சிரங்கொன்றைச் சொறிந்து விட்டால் பலவாய் ஆகும்
தரங் குன்று மனிதரையே கடிந்து கொண்டால்
அவ்வாறேதான்
இந்நிலையில்
இச்சாதாரணன்
புவியாள வந்தாலே பொறுப்பதில்லை யென்னும் போது
கவி யரங்கம் வந்து விட்டால் என் கதி தான் என்னே!
அவி சொறிந்து ஆயிரம் வேள்விகளை செய்வோன் அந்
நாள் ஆள்வோன்
கவி தெரிந்து ஆயிரம் பாடல்கள் புனைவோன் இந்நாள்
ஆள்வோன்
பொறுக்குமா மனம்?
அடுக்குமா இது?
தடுக்கலாம்! இன்று
அடக்கலாம்! உடன்
தகர்க்கலாம்! கை
முறிக்கலாம்! கால்
முடக்கலாம்! எனப் பலர்
முனகலாம்.....அது
முடியுமா?.....
இருள் விலகிப் பொழுது விடியுமா?
ஏழைக் கின்னும் உதவிட முடியுமா?—இந்தச்
சாதாரணன் சிந்திக்கின்றான்
பூதாகாரப் பேயிருள் விலகி விட்டால்
தீதான தனியுடைமைப் பற்றற்று
சீரான பொதுவுடைமைத் தத்துவங்கள்
ஏராரும் மனிதர் வாழ்வில்

தாராள மாயெங்கும் தங்கிடுமே—எனச்
சாதாரணன் சிந்திக்கின்றான்.....
வாழ்வெனும் பாதையை வளப்படுத்த
வன் முறையால் ஆகா தெனல் எம் கொள்கை.
தாழ்வு உயர் வெனும் பேதம் நீங்க
தண் ணெளிசேர் அமைதி தேவை.
புரட்சி யெலாம் மனப் புரட்சி!
கிளர்ச்சி யெலாம் உளக் கிளர்ச்சி!
எழுச்சி யெலாம் எழுத்தில் பேச்சில்.....
எண்ண மெலாம் சமதர்மம் செயல்படுத்த.....
இவை யிருந்தால் என்றைக்கோ வந்திருக்கும்
ஏற்றமிகு பொற்காலம்—புதுமைக் காலம்!
வாழ்க்கை யென்பது என்னவென உணர்ந்த மனிதன்
இருக்கின்றான் ?
பறவையும் விலங்கும் ஊர்வன மற்றும் "உயிர் வாழ்
கின்றன" என்போம்
பகுத்தறிவு மனிதன் வாழ்வில்லை; அவன் வாழ்க்கையை
நடத்துகின்றான் என்போம்
நடத்துகின்றோம் நாம் தான் வாழ்க்கையை என்ற
நம்பிக்கை யில்லான் மனிதனே அல்ல; ஏதோ
கடத்துகின்றோம் நாளை என்று—
நகர்த்துகின்றார் பல பேர் வாழ்க்கை!
இருவர் தெருவில் சந்திக்கும் போது
என்னப்பா சுகமா எனக் கேட்பின்;
"ஆமாம் சுகம்தான்" என்ற பதில் வந்திடுமோ.....
பகர்ந்திடுவீர்.....
"ஏதோ இருக்கின்றேன்" என்றிழுத்து
ஏக அலுப்பில் பதில் அளித்து நகர்கின்றார்; நண்பரை
விடுத்து
ஏனிந்தச் சோர்வு வாழ்க்கையிலே.....இதழ்த்

தேனீந்த மனைவி பொய் என்பார்—அவட்குத்
தானீந்த குழந்தை பொய் என்பார்—
"ஆ" நீந்த வேண்டுமே சம்சாரக் கடல் என்பார்—
எப்போது இதெல்லாம் எனக் கேட்டால்
தப்பாது வயது சொல்வேன்; எழுபதுக்கு மேல்தான்!
பாவம்!
இருபதுக்கும் முப்பதுக்குமிடையில் கூட
இன்ப மெனில் போரின்பந்தான் என நவிலும்
இளந் துறவி உண்டே என்பீர்.....
இதில் ஒன்றிரண்டு தவிர எல்லாமே எனக்கு ஐயம்.....
இவரெல்லாம் பஞ்ச புலன் அடக்கவில்லை.....
இவர்க்குப் புலன்தான் ஒன்றிரண்டு பஞ்சமென்பேன்.....
இன்னும் சிலரோ;
அனைத்தும் பொய் என்று பகலில் கூறி.....
அனைத்தும் உண்மையென இரவில் சொல்வார்.....
வாழப் பிறந்தவன் தான் மட்டு மென்று
தாழப் பறந்து மீன் கொத்தும் பறவைபோல்
வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே செய்தல் வாடிக்கையாம்
திருந்திச் செயல் படுதல் அவர்க்கு நன்று—அல்லால்
திருத்துகின்ற சட்டங்கள் திருத்தி விடும்
தீயவர் கொட்டம் நிறுத்தி விடும்.

குட்டக் குட்டக் குனிகின்ற குப்பனுக்கோ
குல தெய்வம் துணை யென்ற நினைப்பினிலே
குனிந்து குனிந்து கூன் மேவும்
கூனன் நிமிர் வதற்கே மருந்துகள்
கூடிய விரைவில் வரும். அவன்,
குல தெய்வம் விளக்கேற்றும் புது வீட்டில்!
இனிக்கின்ற சர்க்கரையை குழந்தைக் கூட்டம் அள்ளி
அள்ளி வாயில்

நிறைக்கின்ற காட்சிதனைக் கண்டிருப்போம்.....
சுவைக்கின்ற இன்பத்தை அளவறிந்து நுகராமல்.....
மாடு;
மிதிக்கின்ற சேறு போல் ஆக்குகின்றூர் சிலபோர் தம்
வாழ்வை!
வேண்டிய ம்ட்டுமே உணவருந்தி மகிழும் வேங்கை—பசி
தாண்டிய பின்னும் மான்களை விழுங்கி மயங்கும் பாம்பு!
காடகத்தில் இரு காட்சி கண்ட பின்னும்—வாழ்வு
நாடகத்தில் நடிக்கின்றோர் கற்கவில்லை—என்ன செய்ய?
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டும் என்று
அறப்போர் புரிவோன் அரிமா வீரன்
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
ஆனது ஆகட்டு மென்று
அயராதின்பம் அனைத்தும் துய்ப்போன்.....வீரனே
அல்ல; விலங்கினும் கீழோன்.
தன் வீடு—தன் மனைவி—தன் பிள்ளை—தன் சுற்றம்—
என்றிருப்போன் நடத்துவதும் வாழ்வல்ல!
என் நாடு—என் உரிமை—என் மொழியாம்—அனைத்தும்
காக்க.
என்னுலே இயன்றதெல்லாம் செய்திடுவேன் என்போன்
தான் பொது மனிதன்.

ஆதலால்;

மதுவுண்ட வண்டு போல் தேன் குடத்தில் மிதந்திடாதீர்
'எது வேண்டும்' எனக் கென்று துறவி மொழி
பகன்றிடாதீர்

எல்லாமே எனக்கென்று
ஏழைகளைப் பிழிந்திடாதீர்
வாழ்வெனும் பாதையிலே

வழி காட்டும் பலகைகளாம்
கலையும் கல்வியும் கவிஞர்கள் காட்டுவர்.
பதவியும் பக்தியும் பாவலர் விளக்குவர்.
புகழும் செல்வமும் புலவர்கள் பொழிவர்.

முதலில்.....கல்வி.....
கற்றது கைம்மண் அளவென்பர்.....
கற்றவர்க்குக் கையில் மண்
கல்லாதார்க்கோ தலையில்.....என்பேன்.
கை மண்ணுல் பானை வனைவர்
தலை மண்ணே சூளைக்கும் ஆகாதே !
'இளமையிற் கல்' என்றுல்
இளமையிலே கல் எடுத்து எறிதல் என்று
ஏன் தான் சில பேர் பொருள் கொண்டார் ?
கல்வியிற் சிறந்தவர் கம்பர் என்பர்
கல்வியிற் சிறந்தவர் கம்பராதல் தீதன்றே ?
முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதோர் எனில்—
கற்றவரோ
முப்பத்திரண்டு புண்ணுடையராய் விளங்கல் ஏனே:
சிந்தித்தீரோ?
கல்லூரி கண்டவன் நானல்ல எனினும்—என் கையில்...
கல் ஊறியதில்லை எப்போதும்...
கவியூறும் நெஞ்சில்
கலையூறும் கொஞ்சம்.....
புவியேறப் புகழேறும்
தமிழுரை ஆள்வதற்கு—தமிழில்
கற்றது போது மென்று
கற்றவர் சொன்னதாலே
ஒப்பினேன் உளமின்றி .....இன்று
தப்பினேன் உம் தயவால்!

வாழ்வெனும் பாதையிலே
வறட்டுக் கதை பேச நேரமில்லை.
வள்மான கல்வி பற்றி
வந்திருக்கும் புவியரசு பாடக் கேட்போம்.

[புவியரசு பாடியதும்]

அடுத்து

பதவி :—

அடவியிலே ஆயுள் வரை இருப்பதுவும் பெரிதல்ல.....
குளவி நுனிக் கொடுக்கினிலே இதழ் பொருத்தி வலி
பொறுப்பதுவும்
பெரிதல்ல .....இந்தப்
பதவியிலே இருப்பதுதான் பெருந் தொல்லை கச்சியே
கம்பனே !.....
கோபுரத்தின் உச்சியிலே இருக்கின்றேன் என எண்ணிக்
குடல் கருகும் பேர்வழிகள் .....
கோபுரத்து மாடத்தில் கூடுகட்டி வாழ்கின்ற புறுக்
கூட்டம்
கொண்டிருக்கும் மகிழ்வு கூட எனக்கில்லை என அறிந்து
கூறிடுக அனுதாபம் ...கொண்டிடுக நட்புணர்வு !
பதவி யெனும் கொடுங்கத்தி சிலபோரின் கழுத்தறுக்கும்—
பிறர்க்கு
உதவி புரிவதற்கே பதவி யெனப் பொறுப்பேற்றல்
உயிர் பறிக்கும் கத்தியாலே பல உயிர்கள் காத்திடவும்
கூடுமன்றே ?

பழமறுக்கும் கத்திதான் பதவி யென்போம்.....
பழி வாங்கும் வாளாக இருத்தல் கேடு !
சிரஞ்சீவியாய்ப் பதவியில் இருப்போ மென்று
செருக்கு மிகக் கொண்டலைந்த லூயி மன்னன்

சிரம்சீவிப் போட்டு விட்டு புத்தாட்சி கண்ட கதை மறக்க
மாட்டோம்.....
அறங் கூறும் வள்ளுவர்க்கு வாய்த்த நல் தொண்டர்
களால்
புறங் கூறல், புறக்கணித்துப் புவியாண்டால்;— நம்
திறங் கூறப் புலவர் கூட்டம் ....
திரண்டு வரும்.....தேசம் வாழ்த்தும்.....
உடும்பு போல் பதவியிலே ஒட்டிக் கொள்வோன்
உடும்பு வேண்டாம் கை விட்டால் போது மென்பான்
கரும்பு போல் இனிக்கு தென்று கடிக்கத் தொடங்கி
கரிக்குதப்பா உப்பாக எனக் கழன்றோர் உண்டு!
பதவி பற்றிப் பாடுதற்குப் பாவலராம் " ரகுமான் "
இருக்கையிலே
பல வரிகள் நானே தான் பாடிவிட்டேன்.....இது
பதவியிலே உள்ள மோகமல்ல;
பாட்டினிலே உள்ள மோகமென்பேன்.....
நாட்டினிலே நற்கவிகள் பெய்து வரும்
நம் நண்பர் ரகுமானின் நாவெல்லாம்
பதவித் தேன் சொட்டுவதைப் பார்த்திடுவோம்.....
பதவி தனைப் பதம் பிரித்தால் .....
'ப' கரம் நீங்கி.....தவி! தவி! என்று சொல்லும் .....
தவிக்கின்றோம் அதனுலே பதவி என்றூர்.....
பாடட்டும் அவர் பாட்டை! பிறகு பார்ப்போம்!
[ரகுமான் பாடியதும்]

அடுத்து

செல்வம்:.....

'செல்வோம் செல்வோம்' என்று உருண்டு
செல்லுவதால் 'செல்வம்' என்பார்—பண்டிதர்கள்!

சீமான்கள் இரும்புப் பேழையிலே ...
'செல்' அரித்துப் போகு மட்டும் இருப்பதாலே
செல்வம் எனச் செப்புதலும் பொருத்தம் தானே!
இலக்குமி தான் செல்வத்தின் தெய்வம் என்பார்!.....
இலக்குமிகள் ஒரு கோடி வறுமையிலே உழல்கின்றார்...
செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் என்றவர்தான்...
பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை யெனப் புரிய வைத்
தார்.....

செவிச் செல்வம் போது மென்று நிறைவு கொண்டால்
செவியார நாலு வாழ்க போட்டு;
சென்று வருக என்றிடுவோர் வழிச் செலவு வழங்காமல்
வாளெலியார்;

செல்வமுடையார் சீதக்காதி போல் இருத்தல்
வேண்டும் . ...

செழுந் தமிழன் குமணன் போல் பாரி போல் செகமதிலே
சிறக்க வேண்டும்.....

செல்வமுடையார்க்கு அவர் இலக்கணம் .....
செல்வ—"முடை உடையார்".....கு ...

"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளி வந்தது இல்"

என்ற குறள் தான் இலக்கணம்
செந்நாப் புலவர்க் கெல்லாம் செல்வ மழை கொட்டுதற்கு
சிறப்புறு தமிழண்ணல் இருக்கும் போது.....
செல்வமனைத்தும் நானே தட்டிக் கொள்ளல் முறையே
அல்ல.....

செல்வம் தருக என அழைக்கின்றேன் தந்திடுக
தமிழண்ணல்!.....

[தமிழண்ணல் பாடியது]

அடுத்து :

கலை :

கவியரங்கம் முடித்த பின்னர் செய்யும் வேலை .....
கலை ; அங்கை ! என்பார் நன்றி கூறி !
கலைத் திலகம் என்றூலோ ! பட்டமாகும் !
கலை—திலகம் ! என்றூலோ ! மங்கை பட்ட மரமாவாள் !
சுலை, பிணைக்கும் அரசியலை இக்காலத்து !
கலை பிணைக்கு—அரசியல் ஏது எக்காலத்தும் ?
கலை, பிணைக்கு தன் நிழலை அளித்த செயல்
கலித் தொகையில் காதல் காட்சி .....
தன் நிழலைத் தானே கண் டஞ்சும் காட்சி
கலையுலகில் நாள் தோறும் காணும் காட்சி.....
கலை குறைந்தால் மதி குறையும்
காண்கின் றூம் நாள்தோறும் வான வெளியில் !
கலை நிறைந்தோர் உள்ளத்தில் கருணை உண்டு.....
கவலைகளை உணர் கின்ற பண்பும் உண்டு .....
கண்ணீர் விடுகின்ற ஏழைதனைக் காணும் போது .....
கலைஞன் ; தான் படைத்த பாத்திரத்தைக் காணுகின்றூன்
கற்பனை ஓட்டத்தில் அவன் நிலையை அறிகின்றூன்.
கவலை தனைத் தீர்ப்பதற்குக் கடமைதனைச் செய்கின்றூன்
கலை கலைக்காக எனக் கதைத்தோர் ஓய்ந்துவிட்டார்.
கவின் ஒளி வீட்டுக்காக ; விளக்குக் காகஅல்ல ; என
விளக்கம் பெற்றூர் !
கலைகளிலே எத்தனையோ வகையுண்டு—தொகையுண்டு
கவின்கலை
நுண்கலை
ஆடற் கலை
பாடற்கலை
ஆயகலை அறுபத்தி நான்கு கலை.....

வடகலை, தென் கலை ..... தவிர!
இத்தனை கலைகளையும்
முத்தனைய தமிழ் எடுத்து
இவண் வழங்க வந்துள்ளார் என் நண்பர்—வாலி
என்பார்!

வாலுடையவன் வாலி என்று சொல்வது தவறென்று—
காட்டுதற்கே

வாலில்லா வாலியவர் வந்துள்ளார்.....
வாலுடையோன் வாலி என்றுரல்.....
காலுடையோரெல்லாம் காலிகளோ.....? இல்லை.....
இல்லை.....

வண்ண மணித் தமிழால்
எண்ணச் சரம் தொடுக்க
வந்திடுக வாலியாரே.....

[வாலி பாடியதும்]

அடுத்து,

புகழ்.....

கடற்கரையில் தலை நீட்டும் நண்டுகளை
கை நீட்டிப் பிடிக்க ஓட.....
உடனவைகள் போன இடம் தெரியாமல் பதுங்கிவிடும்...
புகழும் அதுதான்!
தேடி அணைத்தால் ஓடி விலகும்.....
கோடி கொடுத்தால் வாடி வதங்கும்.....
மாடிகள் கண்டு மயங்காது.....
மூடி மறைத்தால் தயங்காது .....
நாணயமுள்ளவனை நத்திக் கிடக்கும்.....
ஆணவமுள்ளவனை எட்டி உதைக்கும்.....
தியாகியின் கால்களில் மலர்கள் கொட்டும்.....

தீரனின் சேவடி தொழுது வணங்கும் ...
அரியதாம் புகழின் பெருமைகள் பற்றி
மரியதாசெனும் மாண்புறு கவிஞர்
இனியதாம் மொழியில் இயற்றுவார் கவிதை !

[மரியதாஸ் பாடியதும்]

அடுத்து,

பக்தி.....

கைத்தல நிறை கனி அப்பமொ டவல் பொறி
வைத்துப் படைத்தல் பக்தி எனிலோ
சற்றும் ஒப்பார் ஆண்டவன் என்போர்
திருத்தலம், கோயில் திருக்குள மெல்லாம்
தீர்த்த யாத்திரை செய்வதும் பக்தி.....
திருத்தலம் கோயில் திருக்குள மெல்லாம்
திடமுடன் மனதில் நிறுத்தலும் பக்தி .....
காலொற்றிக் கடவுள்மீது கண் எடுத்து
கண்ணப்பன் வைத்ததுவும் ஒரு பக்தி .....
கல் எறிந்து சாக்கியரும் கடவுளையே
கண்மூடி பூஜித்ததுவும் மற்றொரு பக்தி .....
எம் பெரும ! சிவனே ! என்று இறையைப் போற்றி
ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்காவிட்டால் எங்கே பக்தி?
ஏகலைவன் கட்டைவிரல் காணிக்கை தந்ததிலே குருவின்
பக்தி.....
ஏ குருவே உன் கையை காணிக்கை தா என்பதுதான்
புதிய பக்தி.....
பாவையவள் கணவனையே தெய்வமெனல் பழைய பதி
பக்தி.....
பாவம் அவன் ; பாவையிடம் மண்டியிடல் பதியின்
பக்தி..... !

பக்தியிலே பல உண்டு .....அதையெல்லாம்
சக்தி மிகு வார்த்தைகளால்.....
சர்வரிசை விடுவதற்கு
முடியரசு வருகின்றார்.....
விரைவில் முடி ! அரசு ...
எனச் சொல்லாமல் அழைக்கின்றேன் வந்திடுக !

[முடியரசர் பாடியதும்]

முடிவுரை :

வாழ்வெனும் பாதைக்கு வந்தவரே ;
வழிகள் பல கண்டவரே .....
கல்வி பெறுக ; அதனைக் கசடறப் பெறுக !
பதவி பெறுக ; அதனைப் பண்புடன் பெறுக !
செல்வம் பெறுக ; அதனைச் சீலமுடன் பெறுக !
கலை மணக்கட்டும் நும் வாழ்வில்.....
புகழ் குவியட்டும் நீர் தேடிப் போகாமல்.....
பக்தி வெள்ளம்; நாடு, மொழி, மக்கள் மீது பாய்ந்தாலே
இறைவன் அருள் கிட்டிவிடும்.....
ஏழையின் சிரிப்பில்தான் அவன்
இருக்கின்றான்.....இதை மறவாதீர்.....வணக்கம்.

புரட்சிக் கவிஞர் பாட்டரங்கில்

முதல்வர் கலைஞர் தலைமைக் கவிதை

29—4—71 புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின்

80-வது பிறந்தநாளை ஒட்டி நடைபெற்ற

கவியரங்கு

இடம்:— புதுவை

இன்று காலை: புறப்பட்டுக் கார் ஏறும் போது
புதுவைக்குச் செல்கின்றாயா; அங்கு
"குடி"யுண்டே—

எனக் கேட்டார் என் நண்பர்
இங்குந்தான் தமிழ் நாட்டில் எத்தனையோ குடியுண்டு—
இஃதறியா மனிதரா நீர் என்றேன்.
அவரோ;
வியப்பாலே விழி விரித்து
வேகமாய் எனை விளித்து
என்ன குடி? என்ன குடி?
என்றலற
காரைக்குடி—கண்ணங்குடி—
குன்றக்குடி—குமாரக்குடி
மாங்குடி—மணக்குடி—
லால்குடி—ஆய்குடி—
பொதக்குடி—சுரக்குடி—எனக்குப்
புகழ் தந்த கல்லக்குடி—
போதுமா குடியென்றேன்.....
கல்லக்குடி சரிதானப்பா—தமிழ்நாட்டில்

கள்ளக்குடி தடுப்பதற்குக் கடைதிறப்பு
எப்போதென்றூர்.....?
புதூவைக்குப் போகின்றேன்—பரூக்கிடம்
புள்ளி விவரம் கேட்டறிந்து—
சிந்தித்துச் செயல் படலாம்—பறக்காதே இப்போது!
சென்று வருகின்றேன் எனை விடென்று.....
காரேறிக் கடுகி வந்து—வழியில்
"சாரம்" விடுதியிலே இதனை எழுதிவந்தேன்—
கணம் ஒன்று தாமதித்தால்.....
காருக்குள் நண்பனுமே ஓட்டிக் கொள்வான்—
எழுத விடுவானு .....
எடு! வை! எங்கே
புதுவை? என உயிர் எடுக்க மாட்டானு?...
புதுச் சிறப்பு—தனிச் சிறப்பு—பெருங்
குடிச் சிறப்பு—பெற்ற நல்லூர்
கவிச் சிறப்பு கொண்ட வல்லோர்
புவிச் சிறப்பு கொள்ளும் வண்ணம் வாழ்ந்த பேரூர்.
அன்றொருநாள் ஆயிரத்து தொளாயிரத்து
நாற்பத்தாறில்
அடி உதைகள் குத் தென்று அடியேனும் வாங்கிக்
கொண்டு
ஆவி போகும் வேளையிலே
அரவணைத்த புனித பூமி—இந்தப் புதுவை பூமி—
இன்றென்னை "முதலமைச்சே வருக" என்று
எம் தலைமை; கழகத்தின் சார்பாக அழைப்பதற்கு
இங்குமோர் முதலமைச்சர் இருக்கின்றூர்
தென்றல் வீசும் போதெனக்குப் பழைய
புயல் நினைப்பு வருதல் இயற்கையன்றே!
பழைய பெருமானை—பாட்டெழுதும் புதுவைச் சிவனுரை
பண்புநிறை அமைச்சர் பெருமக்கள் தனை—

பாராட்டி வாழ்த்தி எந்தன் கவியரங்கைத் தொடங்கு
கின்றேன்.....

எங்கள் ராஜாராம—
உங்கள் ராமசாமி ராமச்சந்திரன்
ஆறுமுகம் ராமசாமி சுப்பையா அத்தனையும்
ஆண்டவன் பெயர் என்பதாலே அவர்
அருள் கேட்க வணங்குதலும் தவறல்ல!
சண்முகமும்
அவ்வாறே; ஒளவைச்
சண்முகமோ பெயராலே
அரசர்களின் போரில் எல்லாம் அமைதிதனை
உருவாக்கி விட்டதுபோல்;
புதுவைச் சண்முகமும், புகையடக்கிப் புகழ் பெருக்க
வாழ்த்துகின்றேன்.
முகத்தினிலே பெருமீசை—நல்
அகத்தினிலே தமிழ் ஆசை—நாடெங்கும்
முழங்குகின்ற சிலம்போசை—கொட்டுகின்ற போர்
முரசாம் ம. பொ. சி. பெரியவரை வணங்குகின்றேன்.
புதுவைக் குயில் தனையே போற்றி என்
கவிதை வரிகளையே
அவர் கல்லறையின்
திருமுன்னே
வைக்கின்றேன்.
கண்ணை இமை காப்பது போல்
என்னை என்றும் காப்பதற்கு
இருக்கின்ற தோழர்களே!
எண்ணெய் யென ரத்தத்தைப் பெய்து தந்து
தண்ணிலவாம் தமிழன்னை காக்கின்ற தீரர்களே!
வெட்டி வா என்றுரைத்தால்
கட்டி வரும் வீரர்களே!

பெட்டிக்குள் இருக்கின்ற பணத்தை
ஏழை எடுத்தெடுத்துப் பார்த்து மகிழ்வது போல்—
எனை அழைத்தழைத்து மகிழ்கின்ற நண்பர்களே!
அலை பாடுங் கடல் மல்லை இங்குண்டு தமிழ்நாட்டில்.....
கலை பாடுங் காவியங்கள் கவின் பாடும் சிற்பங்கள்!
நஞ்சையுண்டு... தஞ்சையிலே . ...அங்கு
நஞ்சையுண்ட சிவனுர்க்குக் கோயில் உண்டு .....
மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று
யானை கட்டிப் போரடித்த மதுரை யுண்டு.....
அங்கு,
மீன் ஆட்சி நடத்தியதால் மீன் பொறித்த கொடியுண்டு
மீனுட்சி அம்மைக்கும் வான் முட்டும் கோவிலுண்டு—
நெல்லையுண்டு சேலம் உண்டு .....
குற்றுலம் கோவையுண்டு .....
புதுவையென்று கேட்டவுடன் புதுப்போதை
கொள்வோரும்
மிகவும் உண்டு—

பைந்தமிழால் சுவை கூட்டும்—
பாண்டி வாழ்ப் பெரியோரே
மன்றேறி மணிக் கவிதை முழக்க வந்த கவிஞர்களே!
என் வணக்கம் ஏற்றிடுவீர்;
“ ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று
ஆடுவோமே!”
அடைவதற்குள் அறுதியிட்டுச் சொன்னவனும்
அடலேறு மொழி பகரும் மன்னவனும்
அவனுக்குச் சின்னவனும்.....
இளம் மருது போன்றவனும்.....
எடுத்தவுடன்;

"எங்கெங்குக் காணினும் சக்தியடா—தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா"—என்று
பாரதி—பாடென்று சொன்னவுடன் பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி புகழ்ந்த புலவன் ...
"கனக சுப்புரத்தின" மென்று காத தூரம் இருந்தபேரை
கவி பாரதிக்குத் தாசனென்று
கச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான்.....
களம் சென்று தமிழ் காக்கக் கச்சு இதமாய்க் கட்டிக்
கொண்டான்.....

நிமிர்ந்த போக்கு
நெறித்த புருவம்
நீர்வீழ்ச்சி ஓசை—நெற்
கதிர்க்கட்டு மீசை
பாட்டெழுதும் வித்தையிலே
பாரதி—ரசவாதம் கற்றவனும்—இவனைப்
பார்! அதிரசவாதம் கற்ற வனும்.....
அதிரசவாதம் கற்றவனும்.....
அத்துணை இனிப்பு இவன் பாட்டில்.....
சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்கு நமை இட்டுச் சென்று
சங்கீதப் பேச்சொன்றைக் கேட்கச் சொல்வான்
காதலி: "நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன்
என்றுள்"

காதலன்: "ஆகையால் ஓர் முத்தம் அச்சாரம்
போடென்றுன்!"

"சிற்றூறும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும் வகைபடுத்தி
நெற் சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?...
விளைக்குறியா?
வெடிக்கும் எரிமலையா?

புரட்சிக் கவிஞனெனப்
புவியொப்பி மாலை போட
லோதாதோ இவ்வரிகள் ? ...
" ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம் உண்
டெண்றால்
அத் தேசம் ஒழிதல் நன்றும் "
முழுமனிதன் பாட்டன்றே இப்பாட்டு ; இது கேட்டு
அழும் மனிதன் அரை மனிதன்.....குறை மனிதன்.....
அரை குறை மனிதன்.....
" இருட்டறையில் உள்ளதடா உலகம்
சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றனே "
எனத் தொடங்கி
" சுருட்டுகின்றர் சில பேர்கள் தம் கையில் கிடைத்த
வற்றை "
என முடிக்கும்

இவனேர்
சுருட்டுக் கவிஞன்—புகைச்
சுருட்டுக் கவிஞன்—இவன்
புரட்டுக் கவிஞனுவான் ;
மூடப் பழக்க மெல்லாம் தலை கீழ்ப்
புரட்டுக் கவிஞனுவான்.....
அமளி துமளி ஆர்ப்பாட்டம் அணி வகுப்பு
அதற்குத்தான் கவி வருமா ?
அமைதியிலே உலகு வாழ புதுவைக் குயில் கூவாதா ?
(கூவியதைக் கூறுகின்றேன்)
" புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் "
அமைதிக் கவிஞனுக அழைக்கின்றன் உலகத்தை.....
சாந்தியால் உலகம் தழைப்பது நன்று ?
சமயபேதம் வ்ளர்த்தே தளர்வது நன்று ?

காந்தியார் கதறிய கருத்தினைக் கவிஞன்
கனலிடை மெழுகென உருகியே கேட்பான் .....
" பொய்யுரைப்போன் பயங்காளி—பிறர்
பூமி சுரண்டிடுவோன் பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும்—நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி !"
கருத்துக் கவிஞன் ; சற்றுக் கருத்த கவிஞன்
காலக் கவிஞன் ; முக்காலக் கவிஞன்—
அவன்
சுவையாய்த் தமிழுக்கு அருவியின் பாடல் ;
அமைவாய்க் கண்ட அற்புதம் என்னே ! "
" விருந்து வரக்கண்ட மெல்லி முகம்போல் முல்லை
யரும்பு மலர்ந்த தென்ன வேடிக்கை.....
தெரிந்தவரை கண்டாலும் தெரியாதாரைக் கண்டாலும்
சிரிப்பது தான் இதன் வாடிக்கை....."
இன்னென்று கேளீர் ; விழிக்கு
இனியவள் ஒருத்தி ஆடுகின்றாள்.....மொழிக்குச்
சுவையேற்றி தாசன் பாடுகின்றார் .....
" சதங்கை கொஞ்சும் பாதம் சதி மிதிக்கும் வானில்
மிதக்கும் அவள் தாமரைக்கை ! மேலும்—வதங்கலிலாச்
சண்பகத்து நல்லரும்பு சாடை புரிகின்ற விரல்
கண்கவரும் செம்பவளக் காம்பு !"
மற்றொன்று :
" தொண்டையிலே ஒன்றுமே அடைக்கவில்லை
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்க லுற்றான்
அண்டையிலே மங்கை போய் ' அத்தான் ' என்றாள் "
அவருக்கே உரிய கேலி !
அவர் கவிதைக்கே உரிய சுவை !
உவமைக் கோர் கவிஞன் என்று
உரைக்கின்றார் பெருங்கவிஞர்.....

ஒன்றிரண்டா எடுத்துச் சொல்ல.....

1. "தொட்டி நீலத்தில் சுண்ணும்பு சுலந்த கலப்பன்ன
இருள்தன்
கட்டுக் குலைந்தது"

2. "சோற்றை அள்ளுங்கால் துவள் வாழைத் தண்டில்
உறும்
சாற்றைப் போலே வடியத் தக்க வண்ணம் ஊற்று
நெய்யை!"

புரட்சியா அமைதியா?
பொங்கும் உவமையா? கருத்தா? தமிழ்ப்
போதை தரும் சுவைத் தேனு?.....
எதனை எது மிஞ்சுமென்று
எவர் கூறி வாதிட்டாலும் .....
ஒப்ப மாட்டேன்; ஒன்றை யொன்று
மிஞ்சு மென்பேன்!
ஏடெத்தனை அவர் தந்தார்!
இருண்ட வீட்டில்
குடும்ப விளக்கேற்றி வைத்தார்
இசையமுது பொழிந்து, அதற்குப்
பாண்டியன் பரிசு பெற்றூர்... நமக்குக்
குறிஞ்சித் திட்டுமுண்டு குயில் இதழ் நடத்தும்போது;
கவிதை;
அழகின் சிரிப்பிலே தமிழியக்கம் கவர்ந்து விட்டார்.....
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்.....அவர்
காதல் நினைவிலே கவிப் பெண்ணை வாடவிட்டு; சாவின்
எதிர்பாரா முத்தத்தால் பிரித்து விட்டார்.....
என் ஆசான் பாரதியைப் பார்ப்பேன் எனப் பறந்து
விட்டார் .....

இருகவியும் இறப்புலகில் சந்தித்து என்ன பேசி
யிருப்பாரென
எண்ணுகின்றீர்?...

நாம் தமிழ் நாட்டில் இன்றைக்கு இல்லை யென்று
நம்மக்கள் பேசுகின்றூர்.....
நம்புவதோ இதனை நாமும் .....
செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே
சிந்தை கவர் இந்தப் பாட்டினையே செயல் படுத்த மிக்க
மனம்

நொந்து நான் காத்திருந்தேன்—இன்று
விந்தை கண்டனையோ தம்பீ..... நம்
தந்தையர் நாட்டுக்குத் தமிழ் நாடெனப் பெயர்
தந்தவர் அண்ணை! நாம் வாழ்கின்றேரும் அங்கு!
மெய்யலவோ என்று
பரவசத்தால் நடமாடும் பாரதிக்கு வணக்கம் சொல்லிப்
பாவேந்தன் பகர்வான்

" களியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!" என்றெழுதி வந்தேன்...
இன்றெல்லாத் தமிழர்களும் தமிழைத்தம்
இன்னுயிராய்க் கொண்டு.....
சென்றங்கு எட்டுத்திசை பரப்புதற்கு முனைந்தார்...
அய்ய! நாம் சாகவில்லை—வாழுகிறேரும் தாயகத்தில்!
உண்மைதான் நீர் உரைத்த தென்றூன்!
பாரதியும் தன் தாசனையே தழுவிக் கொண்டு
பாரதிரச் சிரிக்கின்றூன்
இருவருமே பாடுகின்றூர்

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!”

இணைந்து நாமும் பாடிடுவோம்.....
ஏற்றமிகு தமிழகத்தைக் கண்டிடுவோம் .....
நாற்றமிகு சாதிப்பூசல் களைந்திடுவோம் .....
ஆற்றல் மிகு பாரதிக்கும் அவர் தாசர்க்கும் விழா
எடுப்போம்

விழா எடுக்கும் வேளையிலே.....அவர்தம்
விழாக் கருத்தைச் செவிமடுப்போம்
கண்கள் விற்றுச் சித்திரம் வாங்குவதோ
எனக் கேட்ட பாரதிக்குத் தாசன்;
பெண்கள் கொய்யாப் பழக் கூட்டமென்றுரைத்தான்
“தனித்துக் கிடந்திடும் லாயம்—அதில்
தள்ளியடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு—வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?.....
எனக் கேட்டான்.....

காதல் அடைதல் உயிர் இயற்கை—அது
கட்டில் அடங்கும் தன்மையதோ?—அடி
கோதை தொடங்கடி! என்று சொன்னன்—இன்பம்
கொள்ளை! கொள்ளை! கொள்ளை! மாந்தோப்பில்” என்று
மகிழ்ந்தவன்

காதலுக்கு வழி வைத்து கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்”
எனச் சொன்னன்

எப்போது தெரியுமோ?
இப்போது தானே நாம்
குடும்பக் கட்டுப் பாடென்று கூறி
குசேலரைப் போல் ஆகாதீர் எனப்

பிரச்சாரம் புரிகின்ரும்
பேரரசின் சார்பில்!.....
பெருங் கவிஞன் பிள்ளைக் கட்டுபாடு தேவையென
முப்பதாண்டு காலத்திற்கு முன்பாக
முன்னேற்றக் கருத்துரைத்தான் .....
நாலைந்து பிள்ளைக்குத் தந்தையான ஒருவன்
நடு நடுங்கித் திண்ணையிலே படுத்துக் கொண்டான்
நங்கையவள்—அவன் மனைவி வருகின்ருள்—இங்கு
கங்கையைப் போல் பிரவாகம் காட்டுகின்ற கவிஞன்
நடை கேளுங்கள்,

அருமனைவி என்னிடத்தில் மெதுவாக வந்தாள்
அயர்ந்தீரோ என்றுரைத்தாள்; மலர்க்கரத்தால்
தொட்டாள்

"தெருவினிலே பனி என்ருள்; ஆ மென்று சொன்னேன்
தெரிந்து கொண்டேன் அவள் உள்ளம் வார்த்தை
யென்ன தேவை!

பத்து மாதம் செல்லப் பகற் போதில் ஓர் நாள்
பட்ட கடன் காரர் வந்து படுத்துகின்ற நேரம்
சித்தமெல்லாம் மூத்த பெண் சுர நோயை எண்ணித்
திடுக்கிடுங்கால் ஒரு கிழவி என்னிடத்தில் வந்து
முத்தாலம்மை வைத்த கிருபையினுல் நல்ல
முகூர்த்தத்தில் உன் மனைவி பிள்ளை பெற்ருள் என்ருள்
தொத்து நோய், ஏழ்மை, கடன்காரர் தொல்லை
தொடர்ந்தடிக்கும் சூரையிலே பிள்ளையோ பிள்ளை!"
அந்தப்
பாரதிதாசன்;

"பெண்ணைப் பெருமை செய்தான்,
மண்ணைப் போல் மிதிபடும் மானிடரைப் பார்த்து
உன்னை விற்காதே!" என்ருன்

" எதிரிகள் கோடி இட்டழைத்தாலும்
தொடேன் " என
எக்காளக் குரல் கொடுத்தான்.....
காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளியாய் நின்றான்.....
தொண்டு செய்யாது கிடப்பவன்
ஆமை என்றான்.....
தொகை தொகை யாய்க்
கவிச் சரவிளக்கு ஏற்றி வைத்தான்.....
பாரதிக்கு வாரிசாய் பாரதிதாசனானான்.....
தலைவர்க்கும் கவிஞர்க்கும் பிற
தகைமைசால் மேதைக்கும்—தமக்குப் பின்
இருக்கின்ற பரம்பரையே தகுதியாகும்.....
இன்று
பார்க்கின்ற இடமெல்லாம் பாரதி பரம்பரையே
பாரதி தாசன் வழித் தோன்றல்களைப் பார்க்கின்றோம்,
கோக்கின்றார் சொல் முத்து.....பல் கவிஞர்
(பல கவிஞர்)

கோக்கின்றார் சொல் முத்து
பல் இல்லாக் கவிஞர்களும்.....(தேர்தல்)
வாக்கென்றால் பாரதிக்கும் பாரதி தாசர்க்கும் வேறு
நோக்கின்றி வழங்கிடுவார்.....இரு கவியும்
வருவாரோ ஆள்வதற்கு.....
நம் கவியரசை !
இனியுமேன் வரவேண்டும் ஆள்வதற்கு.....
இப்போதே ஆள்கின்றார் நமதுள்ளம்.....
அவர் வாழ்க !
அவர் புகழ் வாழ்க !

5—5—71

பறம்புமலைப் பாரி வள்ளல் விழாக்

கவியரங்கில்

முதல்வர் கலைஞரின் தலைமைக் கவிதை

பறம்பு மலையில் **5—5—71** அன்று நடந்த பாரி வள்ளல் விழாவை யொட்டிய கவியரங்கில் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிப் பாடிய தலைமைக் கவிதை.

மாதவர்க்கு ஒரு பாகம்—
மாது, அவர்க்கு ஒரு பாகம்—
[மாதொரு பாகன்—சிவனார்!]
மாதவர்க்கு ஒரு பாகம்
இந்த விழாவில் குன்றக்குடி
மடத்தின் தலைவர் அடைகின்ற மகிழ்ச்சியிலே
மாதவர்க்கும் ஒரு பாகம் உண்டன்றே?
ஏனெனில், இது முடித்து எனை
இழுத்துச் செல்ல இருக்கின்றார் சிவகங்கை.....

அந்த மாதவர்க்கு வணக்கம்.....
இங்குள்ள அன்பிலார்க்கு வணக்கம்.....
என் பால் அன்பிலார் இருப்பின்
அவர்க்கும் வணக்கம்—பெரிய
மருதனையார் மதுரை முத்து மேயர்க்கும்
சின்ன மருதாம் தென்னரசுத் தோழர்க்கும்
வணக்கம்—

தமிழ்த்துறவி என்கின்றார் நும்மை—
நான் ஏற்பதில்லை—எதைத் துறந்திடினும்

தமிழை மட்டும் துறந்திடேன் எனச் சொல்லும்—நீவிர்
தமிழ்த் துறவி அல்ல!
தவத்திரு அடிகளாரே! ஏற்றிடுக என் வணக்கம்—
இன்று மதியம்:

மதுரையில் தான் தூங்காமல் இக்கவியரங்கப்
பாடல்தனைத் தீட்டி வந்தேன்.....

அங்கு,

மதுரையில் இருந்த சங்கம்—
இங்கு எழுந்து வந்ததுபோல்
இருக்கின்ற புலவர் குழுவே!
அனைவர்க்கும் வணக்கம் சொல்வேன்—

எனக்கிருக்கும் எத்தனையோ வேலைக்கிடை இதுதான்
கவிதை

எனக் கிறுக்கும் எனை அழைத்து என்பால்
தனக் கிருக்கும் பேரன்பை வெளிப்படுத்த—பெருந்
தவக் கிறுக்கர் அடிகளார் அழைத்திட்டார்
கன்றுக்குடி இல்லாமல் பால் கறக்கும் வித்தை கற்ற
சென்னை விட்டு

குன்றக்குடி ஆதீனக் கொடி பறக்கும் பறம்பு மலை வந்து
விட்டேன்

மலைக்கிருக்கும் அழகெல்லாம் மாரியாலே—இந்த
மலைக்கிருக்கும் அழகெனிலோ மன்னன் பாரியாலே இங்கு
—பலாச்

சுளைக்கிருக்கும் சுவை கூட அவனளித்த கொடை
என்பேன்.

அவனரசில் எலியின்
வளைக்கிருக்கும் பாதுகாப்பாய் பூனையென்பர்—வயலின்
களைக்கிருக்கும் மதிப்புகூடத் தன் பொருளின்பால்
வைக்கா வள்ளல்—
கொடிக்கிருக்க வீடாக இழையணித்தேர் ஈந்த அண்ணல்

கதைகளிலே படித்திருப்போம் கலகம் செய்—நாரதரும்
கந்தவேலன் முன் சென்று ..உன் காதலுக்கேற்ற நங்கை
வள்ளி என்பேன் வடிவழகி, வட்டநிலா!
அள்ளி உண்பாய்ப் பார்த்து விட்டால் என்று கூற
முருகனுமே
துள்ளி யோடித் தோகையினைக் கண்டிடவே
புள்ளி மயில் மீதேறிப் புறப்பட்டு அலையலானான் கற்பனை
கேளீர்!
ஈங்கோர் கற்பனை கேளீர்
நெடுந்தொலைவு பயணம் செய்தும் நேரிழையைக்
காணுமல்
பறம்பு மலைக் கருகே வந்து பல் இழந்த பாட்டி ஒருத்தி
யிடம்—மீசை
அரும்பு கட்டா முருகனுமே வள்ளி எங்கே எனக்—கேட்க
பாட்டியோ; மலை மீது ஏறிடுக! கண்டிடலாம்! என்ற
வோர் பதிலை

நீட்டி முழக்கி நடந்திட்டாள்—நெடுநல் வேல்முருகன்,
எறிந்த,
ஈட்டியின் வேகமென ஏறினான் மலையின் மீது
வள்ளி எங்கே? வள்ளி எங்கே? என அலைந்த
வடிவேலனிடம்.....வந்திடுக.....கண்டிடுக ...எனக்
காட்டினர் அங்குள்ளோர், மலையெல்லாம் வள்ளிக்கிழங்கு!
கிழங்குகளின் குறும்பு என்னே.....உண்ணும்
கிழங்கினை வள்ளியென்றே உரைத்து நமை ஏய்த்தாளே
பாட்டி யென்று—
முருகன் ஏமாந்து பறந்து விட்டான்,

ஏமாற்றமில்லாமல் திரும்பலாம் பரிசு பெற்று
பூநாற்றம் கமழ்கின்ற பரம்பு மலைப் பாரி கண்டால்—
எனப்
பாரேற்றும் பெயர் பூண்டான்—தமிழுக்குச்

சீரேற்றும் கபிலனது உறவுங் கொண்டான்
புவி வேந்தன் பாரிக்குத் தமிழ்க்
கவி வேந்தன் கபிலன் தான் உயிர்த் தோழன்
மதி யிரண்டாய்ப் பிரிந்து வந்து மகளிர் எனப் பிறந்தது
போல்—பாரி வள்ளல்
அதியழகுச் சிலையிரண்டைடப் பெண்களாகப் பெற்
றெடுத்தான்
பதியாவோம் அவர்க்கென்றுப் பெண் கேட்டு பல
மன்னர், கிடைக்காமல்
படை கொண்டு பறம்புமலை தாக்கித் தோற்றூர்—தேன்
அடை உடைந்து கிளம்பிவிட்ட ஈக்களன்ன மூவேந்தர்,
பறம்பு மலைத்
தடை தகர்த்துப் பாரி உயிர் குடித்து விட்டார்

நாடிவந்து கேட்டபோது பெண் இல்லை யென்று போர்
நடத்தி, பின்னர்;
தேடி நொந்து திசை நாலும் மன்னர்களைக் கேட்டலுத்து
இறுதியிலே,
காரி மன்னன் செல்வர்க்கு
பாரி மக்கள் துணைவியானூர்
கபிலரது முயற்சியினுல்!
நாடாண்ட தன் தோழன்—தமிழ்
நாயகனும் பாரிக்குத் தான் செய்யும் தனிக்கடமை
முற்றிற்றென்று!

ஏடாண்ட பெருங்கவிஞன் கபில மேலோன்
எந்தன் பாரியுடன் இனிச் சேரத் தடையில்லை, எனக்கருதி
வடக்கிருந்து உயிர்நீத்தான்
சாகின்றூன் நண்பன் எனில் அவன் தலையில் அவசரமாய்க்
கல் ஒன்றைப் போடுகின்ற ஆருயிர்த்
தோழருண்டு இந்நாளில்! எதிரியிடம்

தோற்றிடுவான் தோழன் எனில் துரோகம் செய்து
எட்டப்பர் ஆகின்ற "நல்லோர்" உண்டு நம்நாட்டில்
—அந்த

நன்றி கெட்டோர்க்கும் நல்லறிவு புகட்டுகின்ற
பாடமன்றோ

கபிலர்—பாரி கனிந்த நட்பு!

உண்டிக்கொடை, பொற்கொடை, ஊர்திக்கொடை என
ஒன்பான் கொடை வழங்கும் தமிழ் மரபில் முன்னூறு
ஊர்க்கொடையைப் பாடுநர்க்கு அளித்த—பாரி புகழ்
உலவு தென்றல் காற்றுக வீசுகின்ற மாண்பு கண்டேன்.

வள்ளல்களே வாயார வாழ்த்திவிட்டால் போதாது
வாழ்த்துபவர்

உள்ளங்களும் வண்மையுடன் திகழ்தல் வேண்டும்.
குவித்து வைத்த பொற்குவியல் இருந்தால் தான்—கரங்
குவித்து வரும் எளியோர்க்கு வழங்கிடலாம்—எனக்கூறல்
சாக்குப்போக்கு

அவித்து வைத்த கிழங்கிரண்டில்—பசியால்
தவித்துழலும் ஏழைக்கு ஒன்றீதல் பெருங்கொடையாம்,
மனிதர்,

இரந்துண்ணல் தகாதென்று இங்கிருக்கும் தமிழரசு
சிறந்திடுக பிச்சைக்காரர்! செய்தொழில் கற்றுத்
தேர்ந்திடுக!

என—விடுதி பலத்
திறந்திடவே திட்டமிட்டுப் பணி புரிதல் ஊக்குவிக்க
உமது மனம் அன்பால்
சுரந்திடவே வேண்டுகின்றேன்

முல்லைக்குத் தேர் ஈந்து பாரியானான்— ஒரு ஏழைப்
பிள்ளைக்கு மோர் ஈந்து அவனில் நீர் பாதியாவீர்!

பாரி விழா சிறப்பதற்குப் பாவலர் தம் கவியரங்கில்,
வாரியே வழங்கிடுவர் வண்ணத் தமிழ்ப் பெருமை
யெல்லாம்—

அன்னைத் தமிழின்
தொன்மை
ள்ளிமை
வண்மை
வலிமை
இறைமை
புதுமை—என
எத்தனையோ 'மை' களையே பாடிடலாம்
இத்தரையை முத்தமிட்டார் தேர்தலிலே பலபேர்!

அவரெல்லாம்— பாடுகின்றார், மை—மை—என்றே!
ரஷ்ய மை—ரசாயன மை—
மக்கள் தீர்ப்பை மதியா 'மை' யாலே வெற்றி
உண்'மை'யை மறுப்பவர்க்கு—
இம்மையிலும்—மறுமையிலும்—
இம் 'மை' யிலும், மறு 'மை' யிலும்
என்றுமே தோல்விதான்.....

அன்னை தமிழின் "தொன்மை" என்று
தென்னை நல்கிடும் இளநீர் போல்.....
இங்கோர் கவிஞர் தருகின்றார்.....
இளஞ்சேரக் கவிஞர் அவர் பேர் என்பேன்.....

தமிழின் 'எளிமை' எனும் தலைப்பினிலே
தண்ணொளிசேர் பாட்டொன்று-கேட்டிடுக இப்போது...
அமிழ்தாம் கவிகள் இயற்றுகின்ற
அருமை நண்பர் சவகர்லால் பொழிவார் இங்கே கவிதை
மழை!

'வண்ணை' என்னும் தலைப்பினிலே எண்ணைக் கவி
யொருவர் பாடிடுவார்—
உண்மையொன்று சொல்கின்றேன்—
அவர் இரு பெயரில் ஒரு புலவர், முத்து சம்பந்தம்—
அன்னை தமிழின் 'வலிமை' எனும் தலைப்பினிலே கவிஞர்
அய்யாக்கண்ணு பாடிடுவார்!

அடுத்து—இறைமை!
பாடுபவர்—சிங்கார வடிவேலன்!
சிக்கலிலே வாழும் சிங்கார வேலா—எனப்பாட்டு
கேட்டிருப்பீர்—
தமிழில் இறைமை
எனும்
தலைப்புச்
சிக்கலிலே—இவர் சிறப்புக் கண்டிடுவோம்

அடுத்து 'புதுமை'
கொடியரசன் பாரிவள்ளல்...கோட்டைக்
கொடியரசன்—முல்லைக்
கொடியரசன்—அவன்
முடியரசன்
குடியரசு தழைக்கின்ற இக்காலம் இங்கோர்
முடியரசன் இருக்கின்றார்.....
இவர் கவி முடியரசர்.....
விரைவில்
முடியரசு!

பின்னுரை
முன்னுரையில் நான் சொன்ன கருத்தெல்லாம்—மீண்டும்
முடிவுரையில் சொன்னதாய் கொண்டிடுக!
தமிழின் 'தொன்மை' தனைத் தரணிக்கு உணர்த்
திடுவோம்—

'எளிமை' தனைப் பயன்படுத்தி எல்லார்க்கும் தமிழ் அறிவு
ஊட்டிடுவோம்—

வரை முறையற்ற வண்மையினால்
தமிழ் வளம் வீழாது காத்திடுவோம்
இன்பத் தமிழ் எங்கள் பகைவர்க்கு
'வேல்' என்று முழக்கிடுவோம்.....
வலிமை காட்டிடுவோம்!
இறைமை தனைத் தமிழின் பால் காண்பதிலும்
ஏழைத் தமிழர் சிரிப்பினிலே காண்பதுவே சிறப்
பென்போம்—

பயிற்று மொழித் தமிழாகப்
பரவி விட்டால்;
பால் நிலவுப் பயணத்தைத்
தமிழ் மொழியில் கற்று நாமும்
பல 'புதுமை'களைச் செய்திடுவோம்!
வணக்கம்.

19—9—71-ல்

"சாராய சகாப்தம்"

எனும் தலைப்பில் கல்கியில்

சக்கரவர்த்தி—இராசகோபாலாச்சாரி—எழுதியது.

ஆகஸ்டு பதினேந்தொரு விழாவல்ல
ஆகஸ்ட் முப்பதே தமிழ் நாட்டு விழா
தாழ்ந்தவர் உயர்ந்தார் மதுவிலக்கு வந்ததும்;
வீழ்ந்தவர் முன்போல வாட
ஆழ்ந்த அறிஞர் அண்ணாவை மறந்து விட்டு
வள்ளுவர் வாக்கைக் காற்றிலே பறக்கவிட்டு
வரம் பெற்றுப் பதவி யடைந்த கருணையார்
கள்ளும் சாராயமும் தந்தார்
அரங்கேற்றினர் கடைகளை ஆயிரக் கணக்கில்,
போற்றுக முதல்வர் பணியை!
சோற்றுத் திண்டாட்டம் ஏழை மனைகளில்,
சாராயக் கடைகளில் பெரும் கொண்டாட்டம்!
போற்றுக தமிழ் நாட்டு முதல்வரை,
சாராயக் கடைகளை அரங்கேற்றினர்
வரம் பெற்ற கருணைச் செல்வர்!

[இக் கவிதைக்கு முதல்வர் செப்டம்பர் 17-ல் ஈரோட்டில்
பெரியார் சிலை திறப்பு விழாவில்—மறுப்புக் கவிதை பாடினர்]

"முதல்வர் கலைஞரின் பதில் கவிதை"

செப்டம்பர் 17-ல் ஈரோட்டில் பெரியார் சிலை திறப்பு விழாவில் பாடியது.

"சாராய சகாப்த" மென்று ஓர் கவிதை
சக்ரவர்த்தி ராஜாஜி மாமுனிவர்
தாராளமாய்க் 'கல்கி' ஏட்டில் தீட்டியதால்
யார் யாரோ சுதந்திராக்கள் மகிழுகின்றூர்
'பார் பாராய்க்' குடித்தவர்கள் பர்மிட் வாங்கி
நேர் மாறுய்ப் பேசுகின்றூர் புத்தர் போல!
இதயத்தில் நோய் என்றும்
இரு யூனிட் வேண்டு மென்றும்
இதோ 'டாக்டர் சர்டிபிகேட்' பாரும் என்றும்
இங்கிருக்கும் சுதந்திராக்கள் குடித்த கதை ஊரறியும்!
பணக்காரர் பகல் வேஷக்காரர்க் கெல்லாம்
மனக்குமது வாங்குதற்கு பர்மிட் வேண்டும்!
பகட்டுக்கு ஒருநீதி--பாவம் ஏழைக்கு ஒருநீதி
பஞ்சாக சாத்திரத்தின் புதுநீதி!
வாடுகின்ற ஏழைக் குடிகாரன்
வார்னீஷைக்குடித்து செத்த போதும்—தனம்
மேவுகின்ற சீமான்கள்—போதை
மோதுகின்ற 'விஸ்கி' ரம் அடித்த போதும்
நெளரோஜி வீதியில் தான்
நாற்றம் துலைக்கலையோ?
நாடுதான் பாக்கலையோ?
'ஆழ்ந்த அறிஞர் அண்ணு' என்று
அன்பர் ராஜாஜி இன்றெழுதப் பார்த்து நான்
அயர்ந்தேதான் போனேன் அய்யா!

அன்றொரு நாள்:

அண்ணு பற்றி அரசாங்கப் பாடநூல் வந்தபோது
அற்ப வயதில் செத்தவரெல்லாம்
அவதாரப் புருடர் தாமோ—என எழுதி
அவர் மகிழ்ந்ததெலாம் மறந்தா போகும்?
ஓரிசாவில் இவர் கட்சி ஆட்சியிலே
ஓடிற்றே மதுவின் வெள்ளம்—அப்போது
தரிசாகப் போனது ஏன் இவரின்—உள்ளம்?
வரம் பெற்ற கருணைச் செல்வர் என: எனை
வாழ்த்துகின்றூர் வணங்குகின்றேன்!
வரம் தந்தார்—இவரல்ல; நேசக்
கரம் தந்தார் நாட்டு மக்கள்!
வரம் பெற்றேன்—பெரியார் அண்ணு தந்த நெஞ்ச
உரம் பெற்றேன்!

இப்போதும் சொல்கின்றேன் கேட்டிடுக!
இந்தியா முழுமைக்கும் அறவே
மது விலக்குக் கொண்டுவர சட்டம் செய்தால்
சிரம் தாழ்த்திக் கரம் குவித்து
சிறப்பான செயல் என்று போற்றி நின்று
செயலாக்க முந்திடுவேன் அதன் பிறகும்;
இதயநோய் என்று—சிலர்
இருட்டினிலே குடிப்பதையும்
இனி அனுமதிப்பதில்லை யென்று விதிசெய்வேன்!
முழு விபரம் தேவை யெனில்
பட்டியல் பிறகு சொல்வேன்:

தென்னற்காடு மாவட்ட

திராவிட மாணவர் மாநாட்டுக்கு

கவிஞர் அழைப்பியல வாழ்த்துப்பா

இடம்: புதுப்பேட்டை

நாள் : 3—2—45

பாவேந்தர் பாரதிதாசன்

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செயப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளஞனே திருப்புமுகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழ்க்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பார் எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சியே எம் பூணும் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக் கொணைக் கடல்போல் மாப்பகை மேல்விடு!

நன் மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன் மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வையு யர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே வாழ்க நின் கூட்டம்!
வாழ்க திராவிட நாடு!
வாழ்க நின்வையத்து மாப்புகழ் நன்றே.

5—8—67-அன்று

திருச்சி வாலெலி நிலையத்தில் நடைபெற்ற
விடுதலை வீரர்கள் என்ற கவியரங்கத்திற்கு

பொதுப்பணித் துறை அமைச்சர்

மாண்புமிகு கலைஞர் கருணாநிதி தலைமை ஏற்றார்.

கவியரங்கத்தில் கலந்து கொண்ட
கவிஞர்களை வரவேற்றும், அவர் தம் கவிதைச்
சிறப்பினைப் பாராட்டியும்

கலைஞர் கருணாநிதி அவர்கள்

பாடிய கவிதை

திருச்சிற்றம்பலக் கவிராயர்—கட்டபொம்மன்
நடராசக் கவிராயர் —மருதுபாண்டியர்
முருகுசுந்தரக் கவி —பாரதி
அப்துல் ரஹ்மான் —வ. வே. சு. அய்யர்
இளஞ்செழியக் கவிஞர் —வ. உ. சி.

விடுதலை வீரர்கள்

இமிழ்கடல் வேலித் தமிழகம் ஈன்ற
என்னுயிர் அண்ணன் அன்னையர் தந்தையர்
பொன்னெனெளிச் சோதரர் புகழ்மிகு பாவலர்
கண்மணித் தமிழின் காவலர் யாவரும்
இற்றைத் திருநாள் ஏற்பீர்; வணக்கம்

ஆகா.....
சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில்

கோழைக் கொள்கை குவிந்ததெவ்விதம்?
வெடித்தன விழுக்கள் வெதும்பிய மனத்தில்
குடித்திடுவோம் உயிர் கொடுத்திடுக நாட்டை
விடுதலை வேண்டாம் எனும் உபதேசம்
நரிகளின் ஊளை

நாட்டு வெறி பிடித்த காளைகளே
கிலி பிடித்த மனிதர்களைக் கீறி எறியுங்கள்
புவி வாழ்வின் உச்சியிலே புதுமைதனைப் பொறித்
திடுவோம்

என்று சிலிர்த்துப் பொங்கி எழுந்த
தமிழகம் தந்த விடுதலை மறவர்
கமழ்மணைப் பாவில் மீண்டும் பிறந்திட
வாழ்நெறி நிலையம் வழங்கிய அழைப்பால்
வந்துளர் தாங்கள் தலைவர் நாமும்
விழிகளில் வீரம் சிரித்திடும் தமிழர்
விடுதலை கீதம் பாடிய கதையை
கவிகளின் மொழியில் கேட்டிட எழுவோம்
கண்களில் ஒத்திக்கால் மலர் தொழுவோம்

முதலில்.....
முடக்கடா விடுதலை ஆர்வம் என்றூர்
அடக்கடா சுதந்திர அனலை என்றூர்
அவரை எதிர்த்து,
முழக்கடா முரசமென்று அதிர்ந்திட்ட சிங்கஏறு
சழக்கரால் சாவில் வீழ்ந்த சரித்திரம் கேட்டிடுவோம்
வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கை ஏதுக்கடா
ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று
இப்படிக்

கனல் கொட்டும் பெருமூச்சு
கட்டபொம்மன் உயிர் மூச்சு—முழக்
கயிற்றினிலே ஆறியதால்
கயத்தாறுத் தலம் என்போம்
அத் தவத்து வரலாற்றை
அழகு திரு சிற்றம்பலம்
தருகின்றார்; அள்ளி உண்போம்

[திருச்சிற்றம்பல கவிராயர் "கட்டபொம்மன்"
வரலாற்றுக் கவிதை பாடுகிறார்]

தலைவர் :

செத்து விட்டான் கட்டபொம்மன் என்றிருந்தோம்
மீண்டும்
பெற்று விட்டார் இந்தச் சிற்றம்பலம்; வாழ்க நன்று
அவ்வழியில்
அடுத்தடுத்துப் பிள்ளைகளைப் பெறுவதற்கு அன்னையர்கள்
இருக்கின்றார்;
எடுத்தணைத்து மகிழ்ந்திடவே ஆவலுடன் நிற்கின்றோம்
கெடுதலையைத் தருகின்ற அடிமை நீங்கி
விடுதலையைப் பெறுவதற்கு என் மகனே
கொடு தலையை எனச் சொன்னாள் அன்னை யென்று
கொடுத்து விட்டப் புலி மக்கள் மருதிருவர்
தொடுத்துவிட்ட சுதந்திரப் பூமாலையிலே மணமானார்
விடுத்துவிட்ட அம்புபோல் வேகம் காட்டி தனலில்
பழுத்துவிட்ட சொல் எடுத்துப் பாப்புனைந்து
நடமாட விடுகின்றார் மருதிரு சோதரரை
நடராசக் கவிராயர் மிக நன்றாய்

[நடராசக் கவிராயர் மருது பாண்டியர்
வரலாற்றுக் கவிதை பாடுகிறார்]

தலைவர் :

இரு மருதை இங்கழைத்து வீரத்
திருமலியும் வரலாற்றைத் தந்திட்டார் நம் நண்பர்
இருமருதும் ஒரு மருதாய்ப் பிறந்திட்ட
பெரும் புலவன் பாரதியைக் காட்டுதற்கு—திரு
முருகு சுந்தரக் கவிவாணர் முனைகின்றார் கேட்போம்
பழைய நடை, பழங் கவிதை, பழந்தமிழ் நூல்
பார்த்தெழுதிப் பாரதியார் உயர்ந்தாரில்லை
அழகொளிசேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவியென்றுல் புவிமேற்குற்றம்
கலைந்தவர்க்கும் கல்லாத தமிழர்க்கும் கனிந்தபடி
தோலுரித்துச்
சுலைத் தமிழால் கவியளித்த சுப்பிரமணிய பாரதியார்
நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ என்றெல்லாம்
ஆடும் மயில் தமிழ் என் முன்னன
ஆட வைத்த பாரதிதாசன் பாடுகின்றார்
இவரென்ன பாடுகின்றார், பார்ப்போம்

[முருகு சுந்தரக் கவி பாரதி பற்றிப் பாடுகிறார்]

தலைவர் :

நீர்வீழ்ச்சி போலன்றே நிமிர்ந்த கவி பாரதிக்கு
பாவோச்சிப் பொழிந்து விட்டார்—நன்று நன்று

ஒரு

நீர்வீழ்ச்சிச் சேட்டையிலுல்
பேரதிர்ச்சிப் பெரும் புயலைத் தமிழ்நாடு தாங்கிற்றந்தோ
வ. வே. சு. அய்யரெனும் வாய்மை கொள் செயல் மறவர்
ஆவேச நீர்வீழ்ச்சிச் சுழலில் சிக்கி
அன்றொருநாள் மாய்ந்து விட்டார்

இன்றொரு கவிஞர் அவர் எழுப்ப வந்து விட்டார்
சுவர் எழுப்பிச் சுதந்திரத்தை அடைத்துப் போட்டு
சுற்றி நின்று பாதுகாத்த அன்னியரின் படைகெடுக்க
இவர் எழுந்தார் இடையில் மறைந்தார்
இதோ மீண்டும் வருகின்றார்
அழகொழுகும் அப்துல் ரஹிமானின்
அருமை மிகு செந்தமிழால் உயிர் பெற்று

[வ. வே. சு. அய்யர் பற்றி அப்துல் ரஹ்மான் பாடுகிறார்]

தலைவர் :

மூத்த குடிப்பிறந்த மூதறிஞர் வாழுகின்ற தமிழகத்தில் புகழ்
யாத்த குடிபிறந்த வ. வே. சு அய்யர் கண்டோம்
விடுதலை உறுதி
ஏற்ற குடித்தோன்றல்—எழில்
தூத்துக்குடி கடல்மீது கப்பல் விட்ட ஏந்தல்
இளஞ் செழியக் கவி நண்பர்!
இனிய தமிழ்ச் சொல்லால்
இங்கு வருகின்றார் இதயம் உரை நல்லார்
‘‘திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும் என் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியை பெரிய நம் இதயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே!’’
(இந்த)
அகவற் பாவால் அகத்தினைத் திறந்த
தகவுடை மேலோன் தமிழர் தலைவன்.....

[இளஞ்செழியக் கவிஞர் வ. உ. சி. பற்றி பாடுகிறார்]

தலைவர் முடிவுரை :

சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார்—இந்தத்
தரை யாண்ட வெள்ளையரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்று பலர் கொலையும் உண்டார்
உறை மீறி வெளி வந்த கத்தி போல
உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்,
அவர் பெருமை கூறுதற்கு
அணி வகுத்த இந்த நாளில்
விடுதலைக்கு உயிரீந்த
எவர்பெருமை கூறுதற்கும்
இவர் போலக்
கவி வளத்தைப் பெற்றேனில்லை
கவிதை பாடக் கற்றேனில்லை
தலையறுத்த வீரர் கதை பாடுவதால்
தலையகற்றிப் பாடுகின்றேன் நானும்—அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்! என் கவிதை,
யாப்பின்றி போனலும் போகட்டும்—நம் நாடு, மொழி,
மானம் உணர்வெல்லாம்,
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை
யொன்றுல்
வாய்ப்பின்றிப் போனலும் செய்யுள் கற்க;
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல்—நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக் கொள்கை
மாறுகின்ற கோடாரிகள் உணர்வதற்கு ஒன்று
சொல்வேன்

எத்தனை உயிர்கள்
எத்தனை ரத்தம்
நித்தமும் தந்து பெற்றது விடுதலை
இத்தரை குடைந்து மெத்தவும் உழன்று

பத்தரை மாற்றைப் பெற்ற பின் அதனை
கைத்திறம் காட்டி அணி நகை பூட்டி
சித்திரப் பெண்டிர் களித்திடலின்றிக்
குப்பைக் குழியில் போடுதல் நன்றே?
புட்கள் கூவிடும் சோலையின் நடுவே
முட்கள் கீறிட பறித்த நல் ரோஜா
கட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் மணமா?
குட்டம் கொண்டோன் குறுகிய கையில்
கொடுத்திடல் நலமா?
பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்
உற்றூர்—சுற்றம் ஒருவர்—இருவர்
உயர்வுடன் வாழ்தல் சுதந்திரம் ஆமோ?
கற்றூர்—கல்லார்—கழனியில் உழல்வோர்
சிற்றூர்—கொல்லர்—சிறு தொழில் செய்வோர்
மாதர் நல்லார் மாணவ மணிகள்
தீதறு வாழ்வில் திளைத்தலே சுதந்திரம்
இந்தக் கொள்கை இனிது விளங்க
மந்தக் கொள்கை மாய்ந்து விலக
சந்தத் தமிழ் ஒலிப்போம் இன்று
தங்கக் குன்றே! தமிழே! தாயே! உன்
சிங்கப் புதல்வரின் சிறப்பினைச் சொன்றேனும்
எங்கும் தமிழகம் வெற்றி விளைத்திட
இங்குநீ எமக்கே அருள்வாய் அம்மா!

வணக்கம்!

வாழ்க!!

தந்தை பெரியார் கவியரங்கில்
முதல்வர் கலைஞரின் தலைமைக் கவிதை
சேலம் — சனவரி: 11—1—74

மாண்புமிகு அமைச்சர்களே, மாவட்டத்தோழர்களே,
வணக்கம்.
வளமார் தமிழகத்துக் கவிஞர்க்கும்
வாஞ்சைமிகு சேலத்துப் பெரியோர்க்கும்
உளமார்ந்த என் வணக்கம்—ஏற்றிடுவீர்.
ஓய்வில்லை எனக்கென்று தெரிந்திருந்தும்
உரிமையுடன் கவியரங்கு நிகழ்த்தவரவேண்டுமென்று
உத்திரவை வேண்டுகோளாய் விடுத்துவந்தார்—என்
உழுவலன்பர், உழைக்கின்ற மெய் அன்பர்,
உங்களூர்க் கிருஷ்ண நண்பர்
(நம்மைப்)—
பந்துபோல் உருட்டிவிடுகிறேன் என்கின்றார்; முன்பு
பந்துவாய் இருந்துஇன்று 'பந்த்'துகளை நடத்திடுவோர்
படகுபோல் கவிழ்த்திடுவோம் என்கின்றார்; இந்தப்
படகேறிப் பதவியிலே தொத்திக்கொண்டோர்—
தூளாக ஆக்கிடுவோம் என்கின்ற துரோகிகளும்—
முதுகில்பாயும்
வாளாக மாறிடுவோம் என்கின்ற பாவிகளும்—
சூழ்ந்ததிர்க்கும் சூழ்ச்சியினை முறியடிக்க, நான்
சிந்தனையில்
ஆழ்ந்திருக்கும் போதன்றோ ஆணையிட்டார் கவிஎழுத—
நேற்று, காலை முதல் நள்ளிரவு முடியும்வரை
ஏற்றமிகு நிகழ்ச்சிகள் எட்டுக்குமேல் கோவையிலே!
—கற்பனை
ஊற்றுக்கண் திறக்குமா அதற்கு மேலே—இருந்தாலும்

காற்றுக்கு அசைகின்ற கொடிபோல—நண்பர்களின்
கட்டளைக்கு அசைகின்றேன்—
கூவிபாட!

முதலில் கணபதி வணக்கம்.

கவி எழுதும் ஆற்றல் எனக்குண்டென்ற காரணத்தால்
கவியரங்கத் தலைமைக்குத் தூண்டுகோலாய்த்
துணைநின்ற
கணபதியை நினைக்கின்றேன், கவியரங்கம் தொடர்
கின்றேன்.

ஆர்.வி. கணபதியை நினைக்கின்றேன்
அழகு தமிழ்க் கவியரங்கம் தொடர்கின்றேன்.

பூமியிலே நம்மை வாழவைத்து வளரவைத்த
சாமிதனை முதன்முதலில் தொழுதிடுவோம்—ராம
சாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம்.—பெரியார்
ராமசாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம்.

கவியரங்கம் பாடவந்த காணவந்தபெருமக்காள்
திருவரங்கப்பெருமாள் போல் படுத்திருந்த தமிழ்
உணர்வை
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச்செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றே?
தெருவரங்கம், கலையரங்கம், இசையரங்கம், திரையரங்கம்
எல்லாமே 'அம்மாமி அத்திம்பேர்'
ஜலதரங்கம்! அதுமாற்றித்
தமிழ் அரங்கம், தனிஅரங்கம், கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றே—அதனால்தான்
அவரை,
"பயிர் போன்றூர் உழவருக்கு! பால்போன்றூர்
குழந்தைகட்கு! பசும்பால் கட்டித்
தயிர் போன்றூர் பசித்தவர்க்கு! தாய்போன்றூர்

ஏழையர்க்கு! தகுந்தவர்க்கு!
செயிர் தீர்ந்த தவம்போன்றோர்—செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்றோர்" என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்றான்.

"வீடுகட்டி அதற்குள்ளே வைக்கோலைத்
திணிப்பதுவோ?
வீடுகட்டாமலே வைக்கோற்போர் போடலாமே—
எனச் சொன்ன ஈ.வெ.ரா நாத்திகரா?
இல்லை
இல்லை!
அவர்,
இயற்கையின் புதல்வர்—இத்த மண்ணைமணந்த
மணாளர்—
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்"
என்று,
அக்ரகாரத்து அதிசயமாமனிதர் வ.ரா. என்பார்
அழகாக வரைந்ததொருகட்டுரைதான்
மறந்துபோமோ?
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர்
ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோட
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்காலைகள்
—கோடி
உறுதியாய்க் கூறிநின்றார், குருதிதான் பணயமென்று
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகிறேம்.
உயிர்பிழைக்க!
பங்கமுறு ஜாதிமத பேதங்களால்
அல்லலுறும்— மனித
சங்கத்தின் நோய்களையத் திகைக்கின்றோம்
சரிதானு என்னக்கேட்டார்.

அந்தச்
சிங்கத்தின் குரல்கேட்டுச் சிறுநரிகள் ஊளையிட்டு
கதைதானே நடந்ததிங்கே!
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு—
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வை
—உண்டு.
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு—வெண்
சங்கொத்த கண்களிலே விழுயிரண்டும் கருவண்டு
—அதில்
சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின்—இவரோ
படுகிழமாய்ப்போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி
வந்தார்.

எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன்? என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார், இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.
மதுவிலக்கு தேவைஎன்று மகாத்மா சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார்—
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
"வை,கத்தி!" தீண்டாமைக் கழுத்தில் என்று
வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி.....
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம்வீரர்!

காங்கிரசுக் கட்சிக்கு மீகாமன்—
கதர் இயக்கவெற்றிக்குத் தளபதியாம்—
காந்தி வழிநின்றிட்ட கர்மவீரர்—
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சீபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்.
வ.வே.சு அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு
அழைப்பு தந்தார்.
சேரமாதேவி எனும் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒருகுலத்துக்கொரு நீதி கடைபிடித்தால்
சகிக்குமா பெரியார்மனம்? சமருக்குவில்வளைத்தார்
சரித்திரம் படைக்கலுற்றார். அதன் விளைவாய்த்

தன்மான இயக்கத்தின் தந்தையாகத்—
தமிழர் இனப்பாதுகாப்புத் தலைவராகப்—
பெரியார் ஆனர்—புது
நெறியார் ஆனர்!
பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும்-அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்புத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே,
அதைமாற்றி
மாளிகையில் இருந்தகட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றிகண்டார்

மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்
தானே
அவர்,

பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ— அவர்
பேர்கேட்டு
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்கேட்
டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப்போவார்.
அறிவுமழை
பொழியும். எழில்
வழியும்—தெளிவுமிகு
உரைகள் பலஒளிரும்
திறன்மிளிரும்—கடலின்மடை—
அலையின் ஒலி—மலையின் முடி—
தழுவும் முகில்—பொழியும்மழை!
அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்!
அடிமை முறை ஒழியும்!
அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம், தின்பதுபோல் கழகத்தவர்க்கு,
அணுகுண்டு வெடித்தது போல்
கயவர்கட்கு!
அவர் தலைமை, ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்து
விட்டேன்
அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என்காயத்திற்கு
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்ற காலை—நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும்,
எனைவளர்த்த
தந்தைக்கு அரசுமரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்—

எண்ணியும் பார்த்ததில்லை—
பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப்பூகம்பத்தால் இடியுதுபார்
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூருவளியாம்— அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்—
கண்ஜாடை தெரிந்தால் போதும்—
கறுப்புடை தரித்தோர்உண்டு—கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்
ஈரோட்டுக் குருகுலத்தில் நான் இயற்றியதுஇப்பாடல்
இன்றைக்கும் நினைக்கின்றேன்—பெரியார்
இளவயதில் மறையவில்லை—
நிறைவயது வாழ்ந்து விட்டே ஓய்வு கொண்டார்—
எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்
விட்டால்
அதைக்கட்டி, ஆண்டு பலஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால்; அதற்கு
வயது அதிகமென்று சொல்லி
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர்—
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர்—
அவர் வாழ்வார் வானும் நிலமும் உள்ளவரை!
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்
வாழ்கின்றி பெரியார் பற்றிப்பாடுவதற்கு வண்டமிழ்க்
கவிஞர்களை
வரிசையாக அழைக்கின்றேன்...
